பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 14 | புதன்கிழமை | (28-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 40

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# அரசின் நிலைப்பாட்டை விளக்கவே ஐரோ. நாடுகளுக்குச் செல்கிறேன்

## பயணிக்க முன் தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

**தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் அதிகார இழுபறிநிலையினால் ஸ்தம்பிதமடைந்துள்ள சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு விளக்கும் பொருட்டே ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளேன் என்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரணையாளராக இருக்கும் நோர்வேயின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் பொருட்டும் நேற்றுக் கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு புறப்பட்டுச் செல்ல முன செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக

(10ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் காரை மாணவர் ஒன்றியம் பூட்டியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத் துணை வேந்தரின் காரை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் பூட்டி வைத்துள்ளது.

யாழ்.பல்கலைக் கழக நூலகம், மாலை 6 மணியுடன் மூடப்படுவதைக் கண்டித்தே துணைவேந்தரின் காரைப் பூட்டியதாக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வழமையாக நூலகம் இரவு 8 மணி வரை திறந்திருப்பதாகவும், எனினும் சில நாட்களாக மாலை 6 மணிக்கு மூடப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து நூலகரிடம் கேட்ட போது தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லையெனவும் இதனையடுத்தே தாம் மாலை 6 மணியுடன் நூலகத்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் கோரிக்கையை ஏற்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நேற்று இராஜினாமா

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் மூக்கையா தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். மேற்படி பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்று திரண்டு விடுத்த கோரிக்கைக்கு அமையவே அவர் இராஜினாமாச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் நண்பகலளவில் ஒன்று திரண்ட கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டதுடன் உடனடியாகவே பதவியை துறந்துவிட்டு வெளியேற வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து இராஜினாமாக் கடிதத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்த பேராசிரியர் மூக்கையா தனிப்பட்ட ஒருவரின் வாகனத்தில் கண்டியில் உள்ள தனது இல்ல

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் - கருணா மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் விடுதலைப புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா அம்மானை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நண்பகல் தேனகம் விடுதியில் சுமார் ஒருமணி நேரம் நடைபெற்ற சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசர மனிதாபிமானப் பணிகள், மற்றும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சமாதான முயற்சிகளை தொடர்ந

(10ஆம் பக்கம் பார்க்க)

## சங்கரி தலைமையில் கூட்டணியின் மத்தியகுழு

புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா அம்மானை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நண்பகல் தேனகம் விடுதியில் சுமார் ஒருமணி நேரம்

பணிகள், மற்றும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சமாதான முயற்சிகளை தொடர

(10ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் மறிக்கப்பட்டு நேற்று திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

உரிய ஆவணங்கள் இன்றியும், ஹெல்மட் இன்றியும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களை பிடிக்கும் அதிரடி நடவடிக்கையாக நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறை வீதியில் பெருமளவு பொலிஸார் நிறுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை வரையுள்ள முக்கிய சந்திகள் மற்றும் காங்கேசனதுறை வீதியின் இருமருங்கும் பிரிந்து செல்லும் குறுக்கு வீதிகளிலும் பொலிஸார் தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணி முதல் இரவு 7 மணிவரை இடம் பெற்ற இத்திடீர் சோதனையின் போது உரிய ஆவணங்களின்றியும், ஹெல்மட் இன்றியும் மோட்டார்

(10ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் மகேஸ்வரனை பிரிட்டிஷ் தூதுவர் சந்தித்தபோது.

## சங்கரி தலைமையில்

# கூட்டணியின் மத்தியகுழு முதலாம் திகதி கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொழும்பு அல்விஸ் பிளேசில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இடம் பெறவுள்ளது.

கட்சியின தேர்தல் ஆணைக்குழுத் தெரிவு, மத்திய செயற்குழுவில் ஏற்பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல், கட்சி மாநாடு பொதுச் சபையைக் கூட்டுவது தொடர்பில் முடிவெடுத்தல், ஒழுங்கு நடவடிக்கைக் குழு நியமித்தல், இன்றைய அரசியல் நிலை தொடர்பான விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை மேற்படி கூட்டமானது கடந்த நவம்பர் 30ஆம் திகதி இடம் பெறவிருந்தபோது. தலைவர் வீ. ஆனந்தசங்கரி மீது கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் சிலருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணமாக ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே. (உ)

# புலிகள் மீதான தடையை பிரிட்டன் நீக்க வேண்டும்

## அமைச்சர் மகேஸ்வரன் பிரிட்டன் பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி அப் பிரதேசங்களில் மக்களை மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பிரித்தானிய அரச உதவி செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகள் மீது பிரித்தானியா விதித்துள்ள தடையை நீக்கவேண்டும். இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும்போது பிரித்தானியா விட்ட தவறுகளை நிவர்த்தி செய்ய இலங்கைத் தமிழ் மககளின் பிரச்சினையில் பிரித்தானியா தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரன் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்டிபன் ஈவன்ஸ் ஊடாக பிரித்தானியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவருக்கும், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சருக்குமான சந்திப்பு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சில் நேற்று நடைபெற்றது. இச் சந்திப்பின் போது பொது நலவாய அமைப்பின் தெற்காசியப் பிரிவின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பாக அண்மையில் நியமிக்கப்பட்ட செல்வி ஹத்தரின் கிளீவும் கலந்து கொண்டார்.

தற்போது இலங்கையில் ஏற்பட

(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் நாகரிகம் தெரியாத ஜே.வி.பி. தமிழர்களை அடிமைப்படுத்த நினைக்கிறது

## கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கீதபொன்கலம் செவ்வி

(கொழும்பு)

**ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே அண்மையில் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தினால் தமிழர்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.**

**ஜே.வி.பியின் அரசியல் சித்தாந்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமைகின்றது. தமிழ் மக்களை தமது அடிமையாக வைத்துக்கொண்டு அரசியல் நடத்த முயலும் ஜே.வி.பியின் குள்ளத்தனமான செயற்பாடுகளைக் கண்டு சர்வதேச நாடுகளே அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளன.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் " விடியும்வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். எல். கீதபொன்கலம் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துக் கூறுகையில்,

ஜே.வி.பி.நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண , தாம் விடுதலைப் புலிகளுடன் பேசப்போவதாக தற்போது கூறிவருகின்றது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் ஜே.வி.பியுடன் பேசுவார்களா? என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகள் ஆட்சிப் பீடமேறியதும் தமது சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கிவிடுவார்கள். அத்தகைய நோக்கத்துடன் தான், ஜே.வி.பியும் தற்போது தமிழர்களுக்காக அனுதாபப்படுகின்றது. முதலைக் கண்ணீர் வடிக்கின்றது. தற்போதுகூட அது தான் நடக்கின்றது.

### விருப்பு;அர்ப்பணிப்பு

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் உண்மையான விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படவில்லை.

சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தம், அழுத்தம், எச்சரிக்கை ஆகியன காரணமாகவே இருவரும் சமாதான முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தற்போது, இலங்கையில் சமாதானச் சூழல் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி சர்வதேச நீடுகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்ட பிரதமர் சர்வதேச நாடுகளின் ஆணைப்படி நடக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகளை ஏற்றுக்கொள்வதற்கு அரசியல் யாப்புத் திருத்தப்படவேண்டும் எனக் கூறப்பட்டு வருகின்றது.

உண்மையிலேயே, இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் அக்கறையிருந்தால் அரசியல் யாப்பை சீர் திருத்துவதில் கவனம் செலுத்தியிருப்பார்கள். ஆனால், அவர்கள் இது விடயம் பற்றி எதுவுமே பேசுவதில்லை.

### வீண் குற்றச்சாட்டு

இவை தவிர, தமிழீழ விடுதலைப்புலிகள் இது விடயத்தில் கடினமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றார்கள் எனச் சிலர் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

விடுதலைப்புலிகள் அவ்வாறு நடப்பது சரியானதாகவே இருக்கின்றது. ஏனெனில், அரச ஊழியர்கூட தமக்கு 2ஆயிரம் ரூபாவை சம்பள அதிகரிப்பாக வழங்கவேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள். பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற சமயம் தமது நிலைப்பாட்டிலிருந்து சற்றுக் கீழிறங்கி ஆயிரம் ரூபாவையாவது அதிகரித்துத் தருமாறு கோருவார்கள்.

அவ்வாறே விடுதலைப்புலிகளும் முதலில் கடினமான போக்கைத்தான் கடைப்பிடிப்பார்கள். பேச்சுவார்த்தையின் மூலம் அந்நிலைப்பாட்டை மாற்றமுடியும்

தனித் தமிழீழம் எனக் கோரி வந்த விடுதலைப்புலிகள் தற்போது இடைக்கால நிர்வாக சபையையாவது தருமாறு கேட்கின்றார்கள். எனவே, விடுதலைப் புலிகளுடன் முதலில் இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசு பேச்சுவார்த்தையை நடத்தி அதில் இரு தரப்பும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்.

அதன்பின்னர் அதனை பாராளுமன்றில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொண்டு தற்காலிகமாகவாவது இடைக்கால நிர்வாக சபையை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வழங்கவேண்டும்.

### இனவாத அரசியல்

இவை தவிர இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியிலிருந் து 1994 ஆம் ஆண்டு வரை இனவாதம் பேசும் அரசியலே காணப்பட்டது. இதனால் தமிழ் மக்களின் உரிமைகள் மென்மேலும் நசுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் இராணுவ இயக்கமாக மாற்றமடைந்து தமிழ் மக்களின் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி வந்தனர். அதன் விளைவாக சர்வதேச நாடுகளிற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன் சர்வதேச நாடுகள் விடுதலைப்புலிகளின் போராட்டத்தின் உண்மை நிலையையும் அறிந்து கொண்டன.

இதனால் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அழுத்தத்தை சர்வதேச நாடுகள் கொடுத்து வந்தன.

அதுமட்டுமன்றி தமிழீழத் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவும் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்து வருகின்றது. இதனால் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும். பலம் அடைந்து வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் காட்டி வரும் அக்கறை வரவேற்கத்தக்கது.

### அரசியல்வழி

அரசியல் வழியில் சென்று கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் அரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, தமிழ் பேசும் முஸ்லிம்கள் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் தமிழ்க்கட்சிகளாலும் ஓரங்கட்டப்படுவதாகக் கூறி வருகின்ற அதேசமயம் தாம் ஓர் தேசிய இனம் என்றும் கூறிவருகின்றனர்.

தேசிய இனம் எனக் கூறிவரும் இவர்கள் தமது பிரச்சினைகளையும் தமது கோரிக்கைகளையும் தமது கட்சிகள் மூலமாக அரசிற்கு எடுத்துக் கூறலாம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய இரு கட்சிகள் முஸ்லிம்களுக்காக இருக்கின்றன.

எனவே இவ்விரு கட்சிகளூடாக முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ளலாம். ஆயினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமது பிரச்சினைகளை முஸ்லிம்கள் எடுத்துக் கூறமுடியும். என்றார்.

(உ-60,10)

## உசன் இராமநாதன் வித்தியாலய

# கரபந்தாட்ட ஆடுகளம் அதிபரிடம் கையளிப்பு

(பலாலி)

55வது சேனையகத் தலைமையகத்தின் செலவில் இராணுவச் சிப்பாய்களால் சிரமதானம் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட உசன் இராமநாதன் வித்தியாலய கரபந்தாட்ட ஆடுகளம் நேற்று முன் தினம் பாடசாலை அதிபர் என். நவரத்னராஜாவிடம் 55வது சேனாதிபதியால் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, இவ் விளையாட்டுத் தொடர்பாக இராணுவப் பயிற்றுநர்களின் ஒத்துழைப்பையும் சேவையையும் மேற்படி பாடசாலைக்கு வழங்குவதற்குப் படைத்தரப்பினர் முன்வந்துள்ளனர்.

மேற்படி கையளிப்பு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.





# "மூவிமெண்டோ" உதவித் திட்டத்தால் 9ஆயிரத்து 52பேர் கடந்தவருடம் பயன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பணி செய்து வரும், இத்தாலியை தலைமையகமாகக்கொண்ட மூவிமெண்டோ நிறுவனம் கடந்த வருடம் 7 பிரதேச செயலக பிரதேசங்களில் உள்ள 70 கிராமங்களில் உதவித் திட்டங்களை வழங்கியுள்ளனர்.

இதன்மூலம் 9ஆயிரத்து 52 பேர் பயனடைந்துள்ளனர்.

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, மருதங்கேணி, சங்கானை, உடுவில், கோப்பாய் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுகளில் இந் நிறுவனம் விவசாய முயற்சிகளுக்கான உள்ளீடுகளையும் தென்னம்பிள்ளைகள், கோழிவளர்ப்புத்திட்டத்திற்கான உதவிகள், மலசலகூடம்,கிணறுகள் போன்றவற்றுக்கான உதவிகளையும் வழங்கியுள்ளது.

இவற்றை எக்கோ-2,3 என்னும் திட்டங்களுக்கான நிதியுதவியாக ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது என மூவிமெண்டோ அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வகையில், எக்கோ 2வது திட்டத்தின் கீழ் 4ஆயிரத்து 431 பயனாளிகளுக்கும், எக்கோ 3வதுதிட்டத்தின்கீழ் 4ஆயிரத்து 621 பயனாளிகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 19 கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள 394 குடும்பங்களுக்கு தலா ஒவ்வொரு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 12 கிராமங்களில் 145 மலசலகூடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(உ16)

# 75,055 சதுரமீற்றர் நிலப்பரப்பில் வெடிபொருள் அபாயம் நீங்கியது

(பரந்தன்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் குழுவினரால் வன்னியில் 75ஆயிரத்து 55 சதுரமீற்றர் நிலப்பரப்பு கடந்த இரு மாதங்களில் வெடிபொருள் அபாயத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் மாங்குளம்,கிளிநொச்சி, இயக்கச்சி, ஆழியவளை, ஒலுமடு, முல்லைத்தீவு, மாசார், பரந்தன், புளியங்குளம், இத்தாவில் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகளை அடுத்தே இவ்வாறு வெடிபொருள் அபாயம் நீங்கியுள்ளது.

இப்பகுதிகளில் இருந்து 795 மனிதக் கண்ணிவெடிகளையும் ஒரு கவச எதிர்ப்புக் கண்ணிவெடியையும் ஏவப்பட்ட நிலையில் வெடிக்காத 586 எறிகணைகளையும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மீட்டு செயலிழக்கச் செய்துள்ளனர்.

இதேவேளை, வன்னிப் பிரதேசத்தில் இன்னமும் வெடி பொருள் அபாயமுள்ள இடங்களில் இவர்களின் வெடிபொருள் அகற்றும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

யாழ்ப்பாணம்

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

28

## முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

."முதலியார்கள், இறைசுவதோர், தலையாரிகள், ஆராச்சிகள் முதலாயினோர் முழுச் சமுதாயத்தின் சார்பிலும் வருடமொன்றுக்கு இருதடவைகள் வந்து, கோட்டையிலே கொம்மாந்தரின் முன்னிலையிலே கூடுகின்ற வைபவம் வரிசை எனப்படும். இது முற்காலத்து இராசாக்களின் காலம் முதலாக நடந்துவரும் வழமையாகும். அவர்கள் தங்கள் பணி வையும் விசுவாசத்தையும் அரசினருக்குத் தெரிவிப்பதற்கும் நாட்டிலே நடைபெறும் விடயங்களைப் பற்றி அறிவிப்பதற்கும் பொதுநலன் கருதிச் சில விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் அந்த வைபவம் பயன்படுகிறது. இறைமையாதிக்கம் பெற்றுள்ள கொம்பஞ்ஞீயவுக்கும் நாட்டவருக்கும் அதனால் நன்மை உண்டென்பதால் இந்த வழமை பின்பற்றப்படுதல் வேண்டும்... கோடைகாலத்தில் ஒருமுறையும் மாரி காலத்தில் ஒருமுறையும் என்ற விதமாக அது நடைபெறும் "

## இறைகடமைகளும் பொருள்வளங்களும்

போர்த்துக்கேயர் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் அதன் வருடாந்த வருமானங்களைப் பற்றி முதலியார்களிடமிருந்து அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டனர். அதிலே வரவுசெலவுக் கணக்குகள் பற்றி மேல்வரும் விபரங்கள் அடங்கியிருந்தன.

### வருமானம்

1. இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள நிலங்களில் இருந்து கிடைக்கும் வரி 9,400 பர்தாக்கள்.
2. தஞ்சாவூர் நாயக்கர்களால் இந்த இராச்சியத்தின் அரசர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதலக்கோட்டையிலிருந்து கிடைக்கும் வருமானம் 1,500 பர்தாக்கள்.
3. துறைமுகங்கள், கடவுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் 200 பர்தாக்கள்.
4. இந்த இராச்சியத்தின் உட்பகுதிகளிலுள்ள வயல்கள் மூலம் வரும் வருமானம் 500 பர்தாக்கள்.
5. பிற வரிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானம் 100 பர்தாக்கள் பெறுமதியான பொருள்கள்.
6. யானைகள் மூலமாகவும் அரசாங்கத்திற்கு வருமானமுண்டு. ஆனால் அவற்றைப் பிடிப்பது சிரமம் என்பதாலும்,வருடத்திற்கு வருடம் அவற்றின் மூலமான வருமானங்கள் வேறுபடுவதாலும் நிதானமான கணக்கொன்றை இது பற்றிச் சொல்ல முடியாதென்று முதலியார்கள் அறிவித்தனர்.

### செலவு

1. வருமானமாகக் கிடைக்கும் மொத்தப் பணத்திலிருந்து வருடந்தோறும் 2800 பர்தாக்கள் முதலியார் முதலிய பதவிகளில் உள்ளவர்களுக்கு வேதனங் கொடுப்பதற்கும், கோவில்களை ஆதரிப்பதற்குஞ் செலவிடப்படும்.
2. 1,200 பர்தாக்கள் திறையாகக் கொடுக்கப்படுகின்றது.
3. 4,500 பர்தாக்கள் லஸ்கோரிப் படைகளுக்கும் நாட்டுப் படைகளுக்கும் கூலியாகக் கொடுக்கப்படும்.

இந்த விபரங்களின் அடிப்படையிலே நோக்குமிடத்து யாழ்ப்பாண இராச்சியத்துச் சமுதாயமானது தென்னிலங்கையில் உள்ளதனைக் காட்டிலும் பெரிதும் வேறுபட்டிருந்தது.

கோட்டை இராச்சியத்திலே மானிய சமுதாயவமைப்பின் அம்சங்கள் அழுத்தம் பெற்றிருக்கையிலே யாழ்ப்பாணப் பட்டினத்திலே பணப்புழக்கமுடைய பொருளாதார முறை உருவாகியிருந்தது. அங்கு அரசனுக்கும் குடியானவர்களுக்கும் இடையிலான தொடர்புகளும், கடமைகளும் நிலம், நிலபோகம், நிலத்தின் மூலமான உற்பத்திப் பொருட்கள் என்பவற்றாற் பந்தப்பட்டிருக்கவில்லை. அந்தத் தொடர்புகள் பணத்தை அடிப்படையாகக் கொண்டனவாய் அமைந்துவிட்டன. முதலியார்கள் முதலான பதவிகளைப் பெற்று அரசாங்க சேவை புரிந்தவர்களுக்கு வேதனமாகப் பணம் வழங்கப்பட்டது. இராசகாரியம் நிலமானியங்களின் மூலமானது என்ற கோட்பாடு காணப்படவில்லை. படைகளுக்கும் பணமே கூலியாக வழங்கப்பட்டது.நிலமானியத்தின் அடிப்படையிலான இராசகாரியமென்று இராணுவ சேவை கருதப்படவில்லை. கோயில்களுக்கு ஆதரவாக அரசாங்கத்தின் வருமானங்களின் ஒரு பகுதியான பணங்கொடுக்கப்பட்டமையுங் குறிப்பிடத்தக்கது.

. நித்திய, நைமித்தியக் கருமங்களை நடாத்துவதற்கு வேண்டிய போதிய வருமானங்களுடைய நிலங்கள் அவற்றிடம் இருக்கவில்லை என்பதும் இதனால் உணரப்படும்.

அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 60 சதவீதமும், அரசாங்க செலவுகளில் 85 சதவீதமும் நிர்வாகசேவை, இராணுவசேவை, ஆலயங்கள் ஆகியவற்றுக்கு உரியவை என்பதும் கவனித்தற்குரியது.

### நிலவரி

நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலவரி, வாரம் என்ற இருவகையான வரிகள் சேர்க்கப்பட்டன. அரசாங்கத்துக்குரிய வருமானத்தில் மிகக் கூடுதலான பங்கு, 17ஆம் நூற்றாண்டிலே இவ்விதமாகவே கிடைத்தது. யாழ்ப்பாணப் பட்டினத்தில் விளைநிலங்கள் பெரும்பாலும் தனியார் உடைமையாகவே இருந்தன. நிலங்களை வைத்திருப்போர் அவற்றின் வளத்திற்கேற்ப மதிப்பீடுசெய்யப்பட்ட ஒரு குறிப்பிடப்பட்டதொகைப் பணத்தை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தவேண்டியிருந்தது. அதுவே நிலவரியென்பதாகும். விளைபொருளில் அரசனுக்குரிய பங்குவாரம் எனப்படும். நிலத்திலே செய்கைபண்ணப்படும் பயிர்கள் ஒவ்வொரு செய்கைப் போகத்திலும் கிடைக்கக் கூடியதான வெள்ளாமை என்பவற்றில் அடிப்படையிலே காணியாளர் செலுத்தவேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

(தொடரும்)

---

**வலம்புரியின் அனுசரணையுடன்**

வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

## கவிதைப் போட்டி -2004

**1ம் பரிசு தங்கப் பதக்கம்**
**2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**3ம் பரிசு வெண்கலப் பதக்கம்**
*இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்*

விடயம்

**"தமிழா உனக்கேன் இக்கதி"**

### விதிகள்

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

---

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**

இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

---

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்.........................
.........................
தபால் முகவரி.........................
.........................
பிறந்த திகதி.........................
தே.அ.அ. இல .........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.........
திகதி
.........................
போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.........
திகதி
.........................
போட்டியாளர்கையொப்பம்

# சித்தர் பரம்பரைக்குப் புகழ் சேர்த்த சுன்னாகம் தந்த செல்லாச்சி அம்மையார்

சித்தர் பரம்பரை வழிவந்த செல்லாச்சி அம்மையார் "சுன்னாகத்து அம்மா" என எல்லோராலும் அழைக்கப்படுபவர் அம்மையார். 1863 ஆம் ஆண்டு கணக்கர் முத்துக்குமாருக்கு மூத்த பிள்ளையாக அவதரித்தவர். நம் சைவத் தமிழ் மக்கள் செய்த தவப்பயனின் பெறுபேறாக காலத்துக்குக் காலம் பெரியோர்கள் தோன்றுவதும் சமயப் போதனைகளை மக்களிடையே போதிப்பதும் இயல்பானது. இந்த வகையில் பெண்பாலார் வரிசையில ஔவையார், காரைக்கால் அம்மையார், மங்கையற்கரசியார், திலகவதியார் போன்றவர்கள் தோன்றி மக்களின் நல்வழிக்குக் காட்டிய பணிகள் அளப்பரியன. இத்தகைய பெண் அடியார்கள் வரிசையில் வந்தவர்களில் ஒருவரே சுன்னாகத்துச் செல்லாச்சி அம்மையார் ஆவார்.

செல்லாச்சி அம்மையார் சுன்னாகத்துப் பெரும்புலவர் முத்துக்குமாரக் கவிராயர் பரம்பரையினர் என அறிகின்ற போது மகிழ்ச்சி தருகின்றது. அம்மையார் தமது ஆரம்பக் கல்வியை தனது வீட்டின் அருகே உள்ள பாடசாலையில் கற்றுக் கொண்டார். நாவலர் பெருமான் இயற்றிய பாலபாடப்புத்தகங்கள் எழுத்தெண்ணிப் படித்து தம் அறிவு வளத்தைப் பெருக்கிக் கொண்ட அம்மையாருக்கு நாவலர் பெருமானின் நாலாம் பால பாடம் இல்வாழ்வுக்கும், துறவற வாழ்வுக்கும் உறுதுணை செய்தது எனலாம்.

அம்மையாரின் பிராரத்துவ ஊழ்வினைப் பயனாக வைத்தியப் பணி ஆற்றிய முதலியார் தம்பு என்பவரை 1889 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். தமது பிள்ளைகள் இருவருக்கும் கணவருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை தமது குடும்ப பதிவிரதா தர்மத்தின் வழி செய்து வந்தார்.

## சிவதொண்டில் மிளிர்ந்தவர்

அம்மையார் சிவாலயங்களுக்குச் சென்று சிவ தொண்டு செய்தல் திருவிளக்கிடுதல், திருமெழுக்கிடுதல் போன்ற பல தொண்டுகள் செய்து வந்தார் சுன்னாகம் பிள்ளையார் கோவிலும், மயிலணி சிவன் கோயிலும் அம்மையாரின் குல தெய்வங்களாகும். இவ்வாலயங்களில் எல்லாம் அக்காலத்தில் புராணபடனம் நடைபெற பெரு முயற்சி செய்து பேறுபெற்றார்.

**செல்லாச்சி அம்மையாரின் குருபு,சைத்தினம் இன்றாகும். அதனைச் சிறப்பிக்கும் வகையில் இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

இவ்வாறு வழிபடுங்கால் ஒரு நாள் மயிலணிச் சிவன் கோயில் பூசை வழிபாட்டின் போது "அம்மாவும், அப்பாவும் என்னை அழைக்கின்றனர்'' என தீபாராதனை காட்டும் போது சொல்லி கற்பகக்கிரக் கோயிலுக்குள் சென்று தம் தீவிர பக்தி மேம்பாட்டை அடியார்களுக்குக் காட்டினார். அம்மையார் செய்த சித்துக்கள் அனேகம்.

## சீவன் முத்தர் ஆனார்

அம்மையாரின் கணவனார் 1905 ஆம் ஆண்டு ஆடிமாதம் மாவை முருகப் பெருமானின் தேர்த் திருவிழா அன்று' நோய் வாய்ப்பட்டு சிவபதம் அடைந்தார். இந்தச் செய்தியை கணவனார் பிரியும் நேரம் திகதியை அனைவருக்கும் ஒருமாதத்துக்கு முன்பே சொல்லி வைத்தார் . அம்மையார் அவர்கள் தமது கணவனார் மறைந்ததும் கைம்மை நோன்பை அனுட்டித்து வெள்ளையுடை தரித்து அணிகலன்களைத் துறந்து உணவைச் சுருக்கி. துறவற தர்மத்தைப் பேணி வந்தார். காரைக்கால் அம்மையார் தமது கணவனார் துறவின்பின் பேயுருவம் பூண்டதை நாம் அறிவோம். செல்லாச்சி அம்மையார் சீவன் முத்தர் நிலையில் வாழ்ந்து வந்தார்.

"ஞாலமதி ஞானநிட்டையோருக்கு நன்மையொடு தீமை இலை நாடுவதொன்றில்லை'' என்கின்ற சிவஞான சித்தியார் பாடலிற் குறிப்பிடுகின்ற சீவன் முத்தர் நிலையில் வாழ்ந்து காட்டி வந்தவர் அம்மையார்.

யாழ்ப்பாணத்தில் பலபாகங்களிலும் இருந்து அடியார் கூட்டமும் சன்னியாசிகள் கூட்டம் அம்மையாரை நாடி வந்தது. இவ்வாறாக வந்த கூட்டத்துள் கொழும்புத்துறை முதன்மை பெறுகின்றது. தவயோக சுவாமிகளின் வருகை முதன்மை பெறுகின்றது. தவயோக சுவாமிகள் அடிக்கடி அம்மையாரைத் தரிசிக்க வருவார். அம்மையார் அவர்களும், சுவாமிகளுடன் இடையிடையே அளவளாவி உரையாடுவார் இந் நிகழ்வு பற்றி அளவெட்டி சைவப் பெரியார் செ.மயில்வாகனம் ஆசிரியர் பின்வருமாறு கூறுவதைப் பார்ப்போம்... அனேக விஜயங்களைப் பற்றி அம்மையார் பேசுவார். கொழும்புத்துறைச் சுவாமிகளும் அடிக்கடி வருவார். அவர்கள் இருவரும் அளவளாவி உரையாடுவதும். இருவரும் நெடுநேரம் சமாதி நிலையில் நிலைத்திருப்பதும் கண் கொள்ளாக் காட்சியாகும். இருவரும ஒருவரை ஒருவர் மதித்திருந்தனர். அம்மையார் சொல்லுவார். "ஆயிரக்கணக்கான பரதேசிகள் இங்கு வந்து போயிருக்கிறார்கள் அவர்களுள் சுவாமிகளைத்தான் நான் உண்மைத் துறவியாகக் கணடது" சுவாமிகள் சொல்லுவார்."செல்லாச்சிப் பிள்ளைப்போல ஒரு கெட்டிக்காரியை நான் கண்டதில்லை'' என்பார்.

இவ்வாறாக சைவசித்தாந்த நெறி நின்ற செல்லாச்சி அம்மையார் பலவித சித்துக்கள், அடியார்களுக்கு காட்டி வந்தவர் அம்மையார். அவர்கள் 1929ஆம் ஆண்டு தைமாதத்து அச்சுவினி நட்சத்திரத்தில் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவபதம் எய்தினார்கள். அவர்களின் இறுதிக்கிரியை யோகர் சுவாமிகள் தலைமையில் சுன்னாகம் மயானத்தில் சிவாக்கினி மூட்டி நடைபெற்றது. அம்மையார் அவர்களின் நினைவு மலர் ஒன்று "சுன்னாகம் செல்லாச்சி அம்மையார்'' என்னும் பெயரில் தமிழ்ப் பேரறிஞர் ச.அம்பிகைபாகன் அவர்களால் வெளியிடப்பெற்றது என்பதை அறிய முடிகின்றது. அம்மையார் பெயரால் சுன்னாகத்தில் வீதி ஒன்று உண்டு.சித்தர் பரம்பரை வழிவந்த சுன்னாகத்து செல்லாச்சி அம்மையாரை என்றும் நினைவு கொள்வோமாக.

**கா.சிவபாலன்**

---

## கற்பித்தல் சாதனைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்ட ஆரம்பக்கல்விப் பிரிவு ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-3)

## இலவச கணனிப் பயிற்சி

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் இலவச கணனிப் பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 3.00 மணிக்கு கொக்குவில் ஆடியபாதம் வீதியிலுள்ள சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக இக் கணனிப் பயிற்சிக்கு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 30 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு 6 மாதகாலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

(உ-252)

## விளையாட்டு போட்டி

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.சபாரத்தின சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி சி.செல்லையா பிரதம விருத்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(உ-49)

## நினைவு முத்திரை வெளியீடு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டின் நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. (உ-51)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

தொழில் ஓய்வூதியர்கள் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி நுணாவில் மேற்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக கே.தண்டாயுதபாணியும் செயலாளராக எஸ்.கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (தி-16)

## "வெளிச்சம்" வெளிவந்தது

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான "வெளிச்சம்" சஞ்சிகையின் எண்பத்தி நான்காவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரையின் ஒரு பகுதியுடன், மாலிகா, சித்தாந்தன்,தீபாகுமரேஷ், மீரா பாலகணேசன், சு.வில்வரத்தினம், தானாவிஷ்ணு, முல்லைக்கமல் ஆகியோரின் கவிதைகளும், ஆரதி,கு.லக்ஷ்மணன், க.வே.பாலகுமாரன், ஞானரதன், மலைமகள், நர்மதா, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், த.பிரபாகரன், தி.தவபாலன், டி.சிவராம் ஆகியோரின் கட்டுரைகளும் கருணை ரவி, அஜந்தி ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் வின்சன்ற் புளோரன்ஸ், சாமிநாதன்விமல் ஆகியோரின் மொழிபெயர்ப்புக் கவிதைகளும், புதுவை இரத்தினதுரை, சமிந்த கிறிசாந்தகுமார, சஞ்சய பொன்சேகா, செல்வ மனோகரன், அஜித் பரகும் ஜயசிங்க, ந.சத்தியபாலன் ஆகியோரின சிங்கள-தமிழ்க் கலைக் கூடல் பற்றிய தொகுப்புகளும் தூது, அஞ்சலி என்பனவும் இடம்பெற்றுளளன. (உ)

---

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் இடம்பெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகள் வருமாறு.

மாணவர்கள் பெற்ற புள்ளிகள் அடைப்புக்குறிக்குள் தரப்படுகிறது.

### யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஜி.தாரணி (160), வி.லக்ஸனா (153), எஸ்.அபிஜா (152), பி.சோமா (139), ஜே.லக்ஷி (139), ஆர்.தாட்சாயினி (139), எஸ். அபினயா (138), வி.சரிணியா (134), இ.பானுஜா (133),பி.அஜிலா(131), ஏ.சுஜன் சியா (131), எஸ்.மதுராமி (130), இ.பிருதுஷா (129), வி.சாரூபா (127), எஸ்.மகாலினி (127), வி.ஜவகரி (126), வி.ஜெயவதனி (126), வி.சலோமி (122), ஜெ.ஜெனி (122), ஜெ.விதுஜா (122), ஜே.கிரேஸ் (122),எ.நிருஷா (118), பி.சரண்ஜா (118).

### யா/பரியோவன் கல்லூரி

எஸ்.ஏ. முத்துக்குமார் (136), பி.டிசாந் (153), எஸ்.கஜந்தன் (151), எஸ்.யசோதகிருஸ்ணா (126), ஆர் கஜந்தன் (144), பி.மதுசுதன் (131), கே.விசாகன் (125), ரி.அகர்ஷின் (121), என். அனுசுதன் (151), ரி.பிரணவராவ் (130),ஏ.கௌசிகன் (138 ) ரி.கபிலன் (123), எஸ்.கெய்தினி (140), எஸ். லெஸ்லிலவன்(138), எஸ்.பிரணவன் (130), ரி.ரகுசாந்தன் (136), டி.சாய்கிருஷணா (118),திலக்ஷன் (135)எஸ். விதூர்சன் (121),

### யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

ஜெ.மர்லின் தர்சினி (147), யோ.லோயிதா (146), இ.லோறா ஜெறோமினி(144), சா.ஆரபி (134), சே.விசிலேவிதா(130), ப.அனிற்றா (129), க.புவிதாயினி(128), அ.பிரசோபினி(128) ம.அருளிணி (125), அ.கீர்த்தனா (123),அ.அஇஸபெல்லா(121), மரின்கிரேசியா (120), ப.கனிஸ்ரெலா(120), ஜெ.றெமிலா(120), ந.விதுசா(119), ச.தர்மினி(119).

### யா/மத்திய கல்லூரி

இ.பிருதுவிராஜ் (148), அ.சுகிர்தன் (148), சி.சுசிகரன்(141), ர.வதுஷனான்(137), ஆ.இனோஜன்(136), யோ.கோகிலரூபன்(130), அ.தனுஷன்(130), சூ.சிறிபிரவீன்(126), சி.சதோக்(123), ச.ரவிஜித்குமரன் (123), பி.நிரூசன்(123), எஸ்.சிறிலக்ஷ்மன்(121),தி.சபேசன்(121), எஸ்.கபிசாந்தன்(120), ஆர்.நிரோஜன்(119), மு.அருள்கணேசன்(118).

### யா/சம்பத்திரிசியார் கல்லூரி

ஜெ.எ. அலன்ராஸ்(151), டி. மைக்கிறவுல்(129), டி.சன்ஜீவ் (130), எஸ்.ஏ. சேவியர்(136),எல்.பிரதீபன் (120), பி.எம்.சற்.ராஜா(120), ஏ.அஜித்கார்(140), என்.ஜே. தீரோன்(141), ஏ.ரி.ஜிட்சன்(120), இ.ஜெனத்(129), எஸ்.ஜே.நிதர்சன்(157), ஜே.ரி.திவ்யான்(137).

### யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

எஸ்.கிசோத்(148), எஸ்.நிவேதிகா(141), எஸ்.நிர்த்திகா(130).

### யா/ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலை

இ.சோபிஹா(153), ப.ஆரூரன் (152), ம.ரஜிதன்(139),அ.ஜயராஜ்(137), ம.அச்சுதன் (129), வி.கங்கா(128), க.ஜக்சியா (125), சி.சுஜந்திரன்(124), செ.தர்சினி(121), செ.சஜீபன்.(120).

(உ-3)

---

# புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் 8 இடமும் மாணவிகளுக்கே

## ஆச்சரியப்படுகிறார் பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகியிருந்தன. இதன்படி முதல் 10 இடங்களையும் கொழும்பு மாவட்டத்தைத் தவிர்ந்த மாணவர்களே பெற்றிருந்ததாக பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

கேகாலை ரட்ணவலி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியான ர.ஆரியரட்ண 193 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்திலுள்ளார். குறிப்பாக இப்பெறுபேறுகளின்படி முதல் 8 இடங்களையும் மாணவிகளே பெற்றிருக்கின்றனா என்பது ஆச்சரியப்படத்தக்க விடயம்.

மாணவர்கள் ரியூசன் வகுப்பில் தங்கியிராதவாறு விசேடமான முறையில் வினாத்தாள்களைத் தயாரித்திருந்தமையே மாணவர்களின் வெற்றியின் இரகசியம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளில் திருகோணமலை கோணேஸ்வரக் கல்லூரியைச் சேர்ந்த என்.சுபிலாஷ் 182 புள்ளிகளைப் பெற்றுள்ளார். திருகோணமலை விவேகானந்தக் கல்லூரியைச் சேர்ந்த வி.அனோபிரியன் 180 புள்ளிகளையும் கொழும்பு இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சர்வேஸ்வர ராமநாதன் 177 புள்ளிகளையும் பெற்றுள்ளமை குறிபபிடத்தக்கது.

(த-6)

---

# தேர்தல் நடாத்தும் தேவை தற்போதைக்கு இல்லை

## ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய சூழ்நிலை தற்போதைக்கில்லை என ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துளளது.

இத்தேர்தலை நடத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மட்டுமன்றி அரசியல் ரீதியிலும் ஸ்திரமற்ற நிலை ஏற்படும் என கட்சியின் பிரதான செயலாளர் டி.யூ.எவ். குணசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும்,ஜே.வி.பிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டணி தொடர்பாக எமது கட்சியின் அரசியல் பீடம் ஆராய்ந்து வருகிறது. அதன் பின்னரே இது குறித்த கட்சியின் நிலைப்பாட்டை விளக்கமுடியும்.

வடக்கு - கிழக்கு பிரச்சினை அரசியல் ரீதியிலானது என்றபடியால் அதனை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாகும்.

இவ்வாறான அரசியல் தீர்வு வழியினை உறுதி செய்ய வேண்டுமானால் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் தங்களது இனரீதியிலான செயற்பாடுகளை கைவிட வேணடும் என்றார்.

(தி-60)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# உண்மையின் அருளாய் விளங்கும் புதுமை அன்னையின் அருளாட்சி

இயேசுவின் தாயாக உள்ள மரியன்னை குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் புதுமை அன்னையாக வீற்றிருந்து வரம்கேட்கும் பக்தாகளுக்கு அருள் மழை பொழிகின்றார்.அருளாட்சி செய்யும் புதுமை அன்னைக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம்3ஆம்திகதி செவ்வாய்க்கிழமை கோலாகலத் திருவிழா நடைபெறவுள்ளது.

2000 ஆம் ஆண்டு யூப்பிலி யாத்திரைத்தலமாக அன்னையின் ஆலயம் பிரகடனப்படுத்தப்பட்டமை அன்னை வீற்றிருக்கும் ஆலயத்திற்குக் கிடைத்த பெருமையாகும். ஒவ்வொருநாளும் தேடி வரும்பக்தர்களுக்கு கேட்கும் வரங்களை அள்ளி வழங்கும் அன்னை காணிக்கை அன்னையாகவும் பெயர் பெற்றிருக்கிறார். குழந்தைஇயேசுவை கையில் ஏந்தி செங்கோலோடு காணப்படும் அன்னை புதுமைகள் பல புரிந்துவருகிறார்.

இலங்கையின் வடபகுதியின் மத்தியில் உள்ள யாழ்ப்பாணப் பட்டணத்தில் உள்ள குருநகர் என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது அன்னையின் ஆலயம். நாலா பக்கமும் உள்ள தெருக்களின் நடுவில் கடல் வளம் கொஞ்சும் ஊரில் உள்ளது அன்னையின் ஆலயம். பெருமையோடும்புகழோடும் ஓங்கி நிற்கும் புதுமை மாதா ஆலயம் தான புதுமை அன்னை குடி கொண்டிருக்கிறார். யூப்பிலி யாத்திரைத்தலம் என அழைக்கப்படும் இத்தலத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் புதுமை அன்னை ஆயிரக்கணக்கான பக்தர்களை தன்பால் ஈர்த்துவருகிறார்.

இந்த பக்தியானது சுமார் ஆயிரத்து450ஆம் ஆண்டளவில் இருந்து ஆரம்பமானது. போர்த்துக்கேயரால்



யாழ்ப்பாணக் கோட்டைககு அருகில் ஆரம்பிக்கப்பட்ட இப்பக்தி முயற்சி தற்போது இலங்கை பூராகவும் பரவி நிற்கின்றது. போர்த்துக்கேயரால் கொட்டில் வடிவில் உருவாக்கப்பட்ட அன்னையின் ஆலயம் ஆரம்பத்தில் வெறி மாதா எனபெயர் கொண்டு அமைந்திருந்தது. அன்னை செய்த புதுமைகளினால் பக்தர்கள் புதுமை மாதா அன்னையாக பெயர் கொண்டு அழைத்தனர். ஆரம்பத்தில் கொட்டிலாக அமைக்கப்பட்ட அன்னையின் ஆலயம் இப்பொழுது கட்டடமாக எழுப்பப்பட்டு அழகுறக்காணப்படுகிறது. அன்னையின் முகப்புக்கட்டடம் (டோம்) 1881ஆம் ஆண்டு கட்டப்படடது. இது அன்னையின் ஆலயத்திற்கு அழகு சேர்ப்பதாகக் காணப்படுகிறது.

எத்தனையோ யுத்தங்களையும் இன்னல் களையும் சந்தித்த அன்னையின் ஆலயம் பழைய பங்குத் தந்தை எடுத்த முயற்சியின் பயனாகவும் புதிய பங்குத் தந்தையின் ஆதரவு காரணமாகவும் அன்னையின் ஆலயம் இந்த ஆண்டு புதிதாக கட்டப்படவுள்ளது. இதற்கு அனனையின் அருள் கட்டாயம் தேவை புதிய ஆலயத்தை அமைக்க அன்னையின் பக்தர்களும் ,ஆலய பங்கு மக்களும் ஆலய நிர்வாக சபையுமே முழுப்பங்களிப்பையும் செய்து வருகின்றார்கள். அன்னையின் நவ நாட்கள் இம்மாதம் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒவ்வொருநாளும் மாலை நவநாட்கள் நடைபெறுகின்றது. நற்கருணை வழிபாடு 2ஆம் திகதியும் திருநாள் திருப்பலி 3ஆம் திகதி காலை 7.00 மணிக்கு கூட்டுத் திருப்பலியாகயாழ்.ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். அன்னையின் ஆலயத்தில் சனிக்கிழமைகளில் பெருகும் மக்களினால் அன்னையின் புகழ் இலங்கை பூராகவும் பரவுகிறது. புதுமை மாதா ஆலயம் அன்னையின் திருத்தலமாக மாறியுள்ளது. அன்னையின் பெயர் கொண்ட ஆலயத்தில் அதிகமாக மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் பக்தர்கள் கூடி அவளை மகிமைப்படுத்துதுவது எத்துணை பொருத்தமானது. புதுமை அன்னை தம்மைத் தேடி வருவோருக்கு உண்மையின் ஒளியாய் இருக்கிறார். தனது மகளின் அருளால் அன்னை பக்தர்களுககு அன்பையும அருளையும் பொலிகிறார். உண்மையின் ஒளியாய இருக்கும் புதுமை அன்னை துன்பங்களைத் துடைக்கிறார் பாவங்களை மன்னிக்கிறார். தீமைகளை அகற்றுகிறார் பக்தனுக்காக தனது மகன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக பரிந்து பேசுகிறார். உள்ளங்களில் இறை அன்பையும் பிறர் அன்பையும் வாரி இறைக்கிறார். எல்லோருக்கும் ஆறுதல் அளிப்பவராக புதுமை அன்னை இருக்கின்றார் என்பதற்கு இத் திருத்தலத்தில் நாளாந்தம் வாராந்தம் வந்து குவியும் பக்தர்களே சாட்சி என்றால் அது மிகையில்லை. அன்னையின் திருநாளில் பங்குபற்றி அன்னையின் ஆசீரைப்பெற அனைவரையும் அழைக்கின்றோம். ☐

சீ.நோயல் சர்வானந்தா
குருநகர்

## கூட்டம்

சாத்தாவோலை சம்புநாதேஸ்வரர் சிவாலய நிர்வாக சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக கு.வி. கந்தசாமியும் செயலாளராக ந.சிவறஞ்சனும் பொருளாளராக கி.பூபாலசிங்கமும் கணக்காய்வாளராக மு.தியாக ராஜா , ப.இராஜகுரு ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-71)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சமுகமளிக்கவுள்ளதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளையும் அமைப்புகளின பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ச)

## விரிவுரைகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

முகாமைக் கற்கைகள் வணிக பீட புகுமுக மாணவர்களுக்கு இன்று புதன்கிழமை நடைபெற விருந்த அறிமுக நிகழ்வும், விரிவுரைகளும் நடைபெறமாட்டாது என முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பாக். அணியின் தலைவராக இம்சமாம்-உல்-ஹக் நியமனம்

2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சகல கிரிக்கெற் போட்டிகளுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் தலைவராக இம்சமாம்-உல்-ஹக் செயல்படுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷகாரியாகஹான் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ரமீஸ்ராஜாவும் அணித் தெரிவுக் குழுவின் பிரதான தலைவரான வசீம்பாரியும் இணைந்து இத்தீர்மானத்தை எடுத்திருப்பதாக ஷகாரியாக் ஹான் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாகிஸ்தான கிரிக்கெற் அணிக்கான தலைவர் பதவி அவ்வணி விளையாடவிருந்த போட்டித் தொடரின் போதே சமாம்உல்ஹக் அப் போட்டிகளில் அணியையும் சிறந்த முறையில் வழிநடத்தியிருந் தமையினை அடுத்து பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இத் தெரிவு குறித்து இம் சமாம்-உல்-ஹக் கருத்துக் கூறுகையில்,வழங்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பை மிகச் சிறந்த முறையில் பயன்படுவதன் மூலம் தனது திறமையை மேலும் நிரூபிக்க வுள்ளதாகவும் இத் தெரிவு குறித்து தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.(உ-68)

# திறமையாகச் செயற்படத் தவறிய பங்களாதேஷ் அணித் தலைவர் நீக்கம்

பங்களாதேஷ் கிரிக்கெற் அணியின் புதிய தலைவராக ஹபிபுல் பஸ்ஸார் நியமிக்கப்பட்டுள்ளார். ஹாலீல் மஹ்மூட்டிற்குப் பதிலாகவே பங்களாதேஷ் அணியின் புதிய தலைவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாத இறுதியில் நபீபியா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளவுள்ள கிரிக்கெற் விஜயத்திற்காக 16 பேர் கொண்ட கிரிக்கெற் அணியின் பெயரையும் பங்களாதேஷ் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

இதில் பங்களாதேஷ் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் ஹாலீல் மஹ்மூட் இடம்பெறவில்லை யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்து அணிக்கெதிரான கிரிக்கெற் தொடரின்போது இவர் திறமையாக செயற்படாமையினாலேயே அணியில் இடம்பெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெற் அணியில் மிகத் திறமையான துடுப்பாட்ட வீரரான ஹபிபுல்பஸ்ஸாரை புதிய தலைவராகத் தெரிந்திருப்பது குறித்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக பங்களாதேஷ் கிரிக்கெற் தெரிவுக்குழுவின் பிரதான டெஸ்ட் போட்டிகளில் 25 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளதுடன், 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளின் போது பாகிஸ்தான் அணியை தோற்கடித்துள்ள பங்களாதேஷ் கிரிக்கெற் அணியானது அதன்பின விளையாடிய சகல சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் தோல்வியையே தழுவியிருக்கின்றது.

மேலும், அண்மையில் சர்வதேச கிரிக்கெற் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளுக்கான அணிகளின் தரப்படுத்தல் பட்டியலிலும் பங்களாதேஷ் அணி கடை நிலையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய தலைவர் தெரிவு

விளையாட்டுச்

தான கிரிக்கெற் அணிக்கான தலைவர் பதவி அவ்வணி விளையாடவிருந்த போட்டித் தொடரின் போதே தீர்மானிக்கப்பட்டது. எனினும், நியூசிலாந்துக்கான கிரிக்கெற் சுற்றுப் பயணத்தின் போது மிகச் சிறப்பாகச் செயற்பட்டிருந்த இம்

விததுள்ளது.


# விளையாட்டுச் செய்திகள்

புதிய தலைவராகத் தெரிந்திருப்பது குறித்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக பங்களாதேஷ் கிரிக்கெற் தெரிவுக்குழுவின் பிரதான தலைவரான பாருக் அகமட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பங்களதாதேஷ் கிரிக்கெற் அணியானது தான் இதுவரை விளையாடியுள்ள 26

படுத்தல் பட்டியலிலும் பங்களாதேஷ் அணி கடை நிலையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய தலைவர் தெரிவு பங்களாதேஷ் கிரிக்கெற் அணியின் வளர்ச்சிக்கு எந்த வகையில் பயனுள்ளதாக அமையப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். (உ-68)



மெல்போர்னில் நடைபெற்று வரும் கிராண்ட்லாம் திறந்த டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் ஃபெடரர், அவுஸ்திரேலிய முன்னணி வீரர் லேடன் ஹுவிட்டை தோற்கடித்தார். ஆட்டத்தின்போது வெகு உயரத்தில் இருந்து எடுத்த புகைப்படம்.

# 13 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி சூடியது

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் நேற்று முன்தினம் அடிலைட்டின் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 280 ஓட்டங்களைப் பெறவேண்டிய சிம்பாப்வே அணியினர் அவுஸ்திரேலிய அணிக்குப் பலத்த சவாலாக விளங்கிய போதிலும் கிளான்ஃ. பிளவர் ஆட்டமிழந்த நிலையில் அதன் முயற்சி கைகூடவில்லை.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 7 விக்கெற் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய வீரர்களான மைக்கல் பெவன் 75 ஓட்டங்களையும் அணித் தலைவர் ரிக்கிப் பொண்டிங் 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் கீற்ஸ்ரிக் 3 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 8 விக்கெற் இழப்பிற்கு 266 ஓட்டங்களைப் பெற்றக்கொண்டது. இதில் கிளான்ஃ. பிளவர் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 94 ஓட்டங்களை சிம்பாப்வே அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

மேலும், ரர்வைன் 33 ஓட்டங்களையும் அன்ரூபிளிக்நோட் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இந்தப் போட்டியில் சிம்பாப்வே அணியினர் வெற்றிபெறுவதற்காக மிகக் கடுமையாகப் போராடியிருந்தாலும் கிளான்ஃ.பிளவரின் விக்கெற் வீழ்த்தப்பட்டதும் சிம்பாப்வே அணியின் முயற்சி கைகூடவில்லை.

பந்து வீச்சில் அன்ருசைமன்ஸ் மற்றும் பிரெட்வில்லியம்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தனர். இந்தப் போட்டித் தொடரில் தான் விளையாடியுள்ள எந்தவொரு போட்டியிலும் சிம்பாப்வே அணி இன்னும் வெற்றிபெறவில்லை என்பது தெரிந்ததே. (உ-68)

# பலஸ்தீன பொருளாதாரத்தை புனரமைக்க 3 அம்சத்திட்டம்

## பலஸ்தீன - இஸ்ரேலிய நிபுணர்கள் கூட்டாக வெளியிட்டனர்

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பொருளாதாரத்தைப் புனரமைக்கும் வகையில் 3 அம்சத்திட்டமொன்றை இஸ்ரேலிய பலஸ்தீன நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு சம்மந்தமாக அமெரிக்கா வெளியிட்டுள்ள சமாதான யோசனைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் பலஸ்தீனப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் இருதரப்பினருக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தவுமென இஸ்ரேலிய பலஸ்தீன பொருளாதார நிபுணர்கள் புதியதொரு இடைக்காலத்திட்டத்தை வெயியிட்டுள்ளனர்.

உலகவங்கி சமீபத்தில் வெயிட்டுள்ள அறிக்கையில் 60 சதவீதமான பலஸ்தீன மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும் அவர்களது மாதாந்த வருமானம் 2 டொலர்களுக்கும் குறைவானது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலைமைக்குத் தீர்வு காணவும் பலஸ்தீன மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும்என இப்புதிய இடைக்காலத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் 3 முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன.

முதலாவது அம்சம் பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் விதித்துள்ள போக்குவரத்து மற்றும் வர்த்தக தடை நீக்கப்படுதல்

இஸ்ரேலுக்கும் மேற்குக் கரையோரப் பகுதி மற்றும் காஸா முனைப் பகுதிகளும் இடையே பொருடகளின் பரிமாற்றம் தாராளமயமாக்கப்படல் என்பனவாகும்.

இரண்டாவது அம்சம் இஸ்ரேலினுள் பலஸ்தீனத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படுதல் இஸ்ரேலிய நாணயத்திற்குப் பதிலாக பலஸ்தீன நாணயத்தை அறிமுகம் செய்தல் என்பனவாகும்.

மூன்றாவது அம்சம் பலஸ்தீனப் பிரதேசத்திற்கும் இஸ்ரேலுக்குமிடையே சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை ஏற்படுத்தலாகும். இந்த இடைக்காலத் திட்டத்தை பலஸ்தீனப் பொருளாதார நிபுணர் ஷஜேறப.்.மியாவும் இஸ்ரேலிய நிபுணர் ஆஜேஅமோனும் தயாரித்துள்ளனர். இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அமுலாகும் சூழ்நிலை ஏற்பட்டால் மத்திய கிழக்கில் மீண்டும் சமாதானம் மிளிர வாய்ப்புள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலினால் தொடர்ந்தும் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புச்சுவர் அங்கு ஏற்படுத்தப்படும் சமாதான முயற்சிகளுக்கு பெரும் முட்டுக் கட்டையாகவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (து-2)



அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கரப்பான் பு,ச்சிகளின் பந்தயத்தை நடத்திய டாமியன் பர்கே. அவர் அணிந்துள்ள தொப்பியில் இருந்து வெளியேறிக்கொண்டிக்கும் கரப்பான் பு,ச்சிகள்

# பண ஆசையில் பிணமொன்றுக்கு சொந்தம் கொண்டாடிய பெண்

## ஸ்ரீ ரங்கத்தில் பொலிஸாரால் கைது

(சென்னை)

பல உயிர்களைப் பலிகொண்ட ஸ்ரீரங்க திருமண மண்டபத்தீ விபத்தில் உயிர் இழந்தவர்களில் ஒருவர் தனது கணவர் என்று கூறி வந்த பெண் ஒருவரையும் அவருடன் வந்த இன்னொருவரையும் ஸ்ரீரங்க பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காப்புறுதி தொகையான ஒரு இலட்சம் ரூபாவையும் தமிழக அரசு அறிவித்திருந்த 50 ஆயிரம் ரூபா பரிவுத்தொகையையும் பெறவேண்டும் என்ற தகாத ஆசையில் உந்தப்பட்டே நண்பர் ஒருவருடன் வந்த அப்பெண் திருச்சிராப்பள்ளி அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அடையாளம் தெரியாத 33 வயதான ஆடவர் உடல் தனது கணவருடையது எனக்கூறி துக்கம் தெரிவித்து இறுதிச்சடங்கிற்காக அந்த உடலை எடுத்துச்செல்ல முன்வந்ததாகவும் இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சம்பந்தப்பட்ட பெண்மணியும் உடன் வந்தவரும் பொய்யான தகவலை அளித்தமையைக் கண்ட றியப்பட்டு இவர்களை கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

இவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது அடையாளம் தெரியாத இந்த நபரின் உடல் இன்னமும் மருத்துவமனையில் தான் வைக்கப்பட் டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று நிகழ்ந்த இந்தக் கோரவிபத்தில் பலியானோர் எண்ணிக்கை 59ஐ எட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (து-9)

## உலக தரிசனம்

# 12 மாடிக் கட்டடம் இடிந்து 33 பேர் காயமடைந்தனர்

(ஹெய்ரோ)

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் 12 மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் 33 பேர் காயமடைந்துள்ளனர்.

கட்டடத்தின் கீழ்த் தளத்தில் ஏற்பட்ட தீயின் காரணமாக இக் கடடடம் இடிந்து வீழ்ந்துள்ளது.

எகிப்தில் கட்டடங்களின் நிர்மானப் பணிகள் உறுதியில்லாததால் இத்தகைய விபத்துக்கள் இடம்பெறுவது சகஜம் என அந்நாட்டின் வீடமைப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் 6 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்நததில் 7 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (து-2)

# காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா தி.மு.க. தலைவரை நாளை சந்திப்பார்

(சென்னை)

காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாகாந்தி நாளை திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மேலிடத் தலைவர்கள் மன்மோகன்ஷிங், கமல்நாத் ஆகியோர் கடந்த 25 ஆம் திகதி சென்னையில் மு.கருணாநிதியைச் சந்தித்துக் கூட்டணி தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில் சோனியா காந்தி நாளை மு.கருணாநிதியை சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின் போது காங்கிரஸ்ஸிற்கு எத்தனை இடங்கள் என்று முடிவு செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,நாடாளுமன்றத் தேர்தலில் சோனியாகாந்தி வெற்றியீட்டினால் அவரைப் பிரதமராக ஏற்கத் தயாராகவிருப்பதாக மு.கருணாநிதி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்மொழியை செம்மொழியாக அங்கீகரிக்கவேண்டுமென்பதையும் மத்தியில் ஆட்சிமொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழியும் அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்த ஒருபோதும் தவறமாட்டேன் என்றும்,

பொதுவாக நாடு முழுவதும் பெருமளவில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என வலியுறுத்துவேன் என்றும் மேலும் கூறியுள்ளார்.(து-2)

## கைதிகள் பரிமாற்றம் தொடர்பான

# இஸ்ரேலின் உடன்பாட்டிற்கு அரேபிய சமூகம் வரவேற்பு

(றியாத்)

கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா அமைப்பிற்கும் இடையே காணப்பட்டுள்ள உடன்பாட்டினை அரேபிய சமூகம் வரவேற்றுள்ளது.

ஜேர்மனியில் மேற்கொள்ளபபட்ட இந்த உடன்பாடுகளின் பிரகாரம் சுமார் 400இற்கும் மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்ய இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் லெபனானைத் தளமாகக் கொண்டிருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பை இஸ்ரேல் அங்கீகரித்துள்ளதாக அரேபிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (து-2)

# தேர்தல் நடத்துவதற்கான பாதுகாப்பு ஈராக்கில் இல்லை

## அந்நாட்டின் உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(பக்தாத்)

ஈராக்கில் தேர்தல் நடத்துவதற்கு அந்நாட்டில் போதிய பாதுகாப்பு இல்லையென அந்நாட்டின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழ்நிலை இருக்கின்றதா என்பது குறித்து ஆராய விசேட குழுவொன்றை அங்கு அனுப்பிவைப்பதற்கு ஐக்கிய நாடுகள்சபை ஆலோசனை நடத்தி வரும் நிலையில் ஈராக்கின உள்துறைஅமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக்கிற்கு ஏற்கனவே சென்றுள்ள ஐக்கியநாடுகளின் பாதுகாப்புத்துறை நிபுணர்கள அங்குள்ள பாதுகாப்பு நிலமைகளைக் கூர்மையாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறன்றது. எவ்வாறாயினும் ஈராக்கில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் (து-2)

## அணுத் தொழில்நுட்ப விற்பனை தொடர்பாக

# பாகிஸ்தான் மீது எழுந்த சந்தேகம் வலுப்பெறுகிறது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அணுகுண்டுகளை தயாரிப்பதற்கு மூலகாரணமாக விருநத நபர் ஒருவரும் மற்றுமொரு அணுவிஞ்ஞானியும் ஈரானுக்கு அணுத் தெழில்நுட்பங்களை விற்பனை செய்தார்கள் என்ற சந்தேகம் வலுப்பெற ஆரம்பித்துள்ளது.

ஈரானுக்கு அணுத் தொழில்நுட்பங்களை விற்பனை செய்தது தொடர்பாக பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரி கள் நடத்திய விசாரணைகளில் இருந்து இந்த இருவருக்கும் தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

1998 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பரீட்சித்த அணு குண்டைத் தயாரித்த அப்துல் கபீர்கான் அப்போது நாட்டின் தேசிய நபராகக் கருதப்பட்டபோதிலும் தற்போது அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அணு விஞ்ஞானி முகமட் பாருக் வேறு ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,ஈரானுக்கு அணுத் தொழில்நுட்பங்களை விற்பனை செய்தது தெடர்பான விசாரணைகளை கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-2)



அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாணத்திலுள்ள டெய்ஸ்டன் நகரில் நாய்களை வாக்கிங் அழைத்துச் செல்கிறா நாய்களுக்கான மனஉளவியல் மருத்துவர் சிசெர் மிலன்



சீனாவில் குவாங்ஜௌவில் உள்ள உயிரியல் பூங்காவில் ஞாயிற்றுக்கிழமை நடந்த நாடகத்தில் நடிகருக்கு முத்தம் கொடுக்கிறது மனிதக் குரங்கு.

## இன்று ஒரு தகவல்

# போலி டாக்டர்

ஒரு விவசாயி புளியமரத்தில் ஏறினார். கால் வழுக்கி விட்டது. கிளையில் இருந்து கீழே விழுந்துவிட்டார். பலமான அடி. வலது காலில் முழங்காலுக்குக் கீழே இரண்டு எலும்பும் முறிந்துபோய்விட்டது. தொடை எலும்பும் முறிந்துவிட்டது.

அவரது உறவினர் ஒருவர் இதைப் பார்த்துவிட்டு உடனே ஒரு காரில் அவரை ஏற்றிக்கொண்டு பட்டணம் போனார். பெரிய மருத்துவமனை ஒன்றுக்குப் போக வேண்டும் என நினைத்தார். ஆனால் அந்தக் காரைச் செலுத்திக்கொண்டு வந்தவர் கூறினார் " ஐயா... பெரிய ஆஸ்பத்திரிக்குப் போனால் இதற்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்பார்கள். அதிகச் செலவு ஆகிவிடும். பக்கத்து ஊரில் எனக்குத் தெரிந்த ஒருவர் உள்ளார். அவரிடம் போனால் அறுவைச் சிகிச்சை ஒன்றும் தேவைப்படாது " என்றார்.

" சரி அப்படியென்றால் அங்கேயே போவோம் என்று அங்கே போயிருக்கின்றனர். அவர் காலைப் பார்த்தார். உடனே அதில் ஏதோ ஒரு எண்ணெயைத் தடவி இறுக்கமாகக் கட்டினார். இவர்களும் வீட்டுக்கு வந்து விட்டனர்.

வந்து இரண்டு நாளில் கால் வீங்கிப் போய்விட்டது. கடுமையான வலி வேறு. பக்கத்தில் உள்ள ஒரு டாக்டரிடம் போய் விடயத்தைக் கூறினார்கள். அவர் ஒரு தூக்க த்திரையைக் கொடுத்து இதைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கு வலி தெரியாது என்று சொன்னார். அதன்பின் நிலைமை படு மோசமாகி ஒரு கட்டத்தில் மயங்கிவிழுந்து விட்டார்.

அதன்பின் அவரை அவசரமாக தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அங்கே எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தார்கள். அப்போதுதான் அந்த விபரீதம் புரிந்தது. முழங்காலுக்குக் கீழே உள்ள பகுதியில் இறுக்கமாகக் கட்டுப் போட்டதனால் அந்தப் பகுதி அழுகிப் போய் கேஸ் காங்க்ரீன் என்ற நோய் வந்திருக்கின்றது எனப் புரிந்தது.

உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்து முழங்காலின் மேலேவரை அழுகிய பகுதியை வெட்டி அகற்றினார்கள். ஆறு பாட்டில் இரத்தமும் கொடுக்கப்பட்டது. இப்போது அந்த விவசாயி செயற்கைக்கால் பொருத்திக் கொண்டு நடக்கின்றாராம். தமிழ் நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் உண்மையாகவே நடந்த கதை இது.

இதற்கு என்ன காரணம்? போலி டாக்டர்கள் பெருகிப் போனதுதான் காரணம். கருச்சிதைவு செய்வது, எலும்பு முறிவு சிகிச்சை போன்ற விடயங்களுக்குத் தான் போலி டாக்டர்கள் அதிகம். மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது போலாகிவிடும்.

எலும்பு முறிவு வைத்தியம் என்று பலகை மாட்டி வைத்திருப்பார்கள். உள்ளே சென்றால் எக்ஸ்-ரே கூட எடுத்துப் பார்க்க மாட்டார்கள். எடுத்துப் பார்த்தால் தானே உண்மையிலேயே எலும்பு முறிந்துள்ளதா இல்லையா என்று கண்டுபிடிக்க முடியும்.

எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்காமல் இரத்தக் கட்டு, சதை பிசகு , மூட்டு விலகல் போன்றவற்றைக்கூட எலும்பு முறிவு என்று நினைத்துக் கொண்டு எண்ணெய், முட்டைக்கரு, சுண்ணாம்பு போன்றவற்றைப் போட்டு இறுக்கிக் கட்டி விடுவார்கள். கடைசியில் என்ன ஆகும் தெரியுமா?

இரத்த ஓட்டம் தடைப்படும். சிறுநீரகம் சேதமடையும். இது மிகவும் ஆபத்தான விஷயம். பலருக்கு எலும்பு மூட்டுக்கள் செயற்படாமல் மயோசைட்டிஸ் ஆசிபி கொன்ஸ் என்ற நோய் வந்துவிடும். இதைக் குணப்படுத்த முடியாது. அறுவைச் சிகிச்சைதான் ஒரே வழி.

ஒரு சாதாரண எலும்பு முறிவை எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்து மாவு போட்டு மிகச் சுலபமாக குணப்படுத்துவதை விட்டுவிட்டு இவ்வளவு அவஸ்தையும் தேவையா? நிஜ டாக்டர் என்பவர் நோயைக் குணப்படுத்துபவர்கள். போலி டாக்டர்கள் நோயை உண்டாக்குபவர்கள். இதுபோன்ற ஆசாமிகளிடம் இருந்து நாம்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

ஒரு ஆஸ்பத்திரி...! அங்கே ஒரு பெரிய அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்தது. மேஜர் ஆபரேஷன். "ஆபரேஷன் சக்ஸஸ்" என்று கூறி அழ ஆரம்பித்து விட்டார் அந்த டாக்டர். ஆபரேஷன் வெற்றி என்று கூறிவிட்டு அழுகின்றீர்களே என்று கேட்டார் அந்த நோயாளி. " இது அழுகை இல்லை ஆனந்தக் கண்ணீர் " என்றார் டாக்டர். "என்ன சொல்கின்றீர்கள்? எதற்கு ஆனந்தக் கண்ணீர்? " என்றார் நோயாளி. பின்னே என்னப்பா... 8ஆம் வகுப்பு படித்த நானே இவ்வளவு பெரிய ஆபரேஷன் செய்தேன் என்பது எவ்வளவு பெரிய விடயம்? " என்றார் கன்னத்தைத் துடைத்தபடி.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூன்று அமைச்சுக்களின் கைமாற்றம் மக்கள் விடுதலை முன்னணிக்கே சாதகம்

## குற்றம் சாட்டுகிறார் கல்விஅமைச்சர்

(கொழும்பு)

ஜே.வி.பியினருடன் கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் அவர்களது தலைவர் சோமவன்ச அமரசிங்கவை இலங்கைக்கு அழைப்பதற்காகவுமே ஜனாதிபதி நாட்டின் முக்கிய மூன்று அமைச்சுக்களையும் தன்னிச்சையாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவ்வாறு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமர் நாட்டில் இல்லாதவேளை அரசினைக் கவிழ்ப்பதற்காகவே நாட்டின் மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி தன்னிச்சையாக பொறுப்பேற்றுக் கொண்டார். இது பலரின் வெளிப்படையான கருத்தாக இருந்து வருகிறது.

ஆனால், ஜே.வி.பியினருடன் கூட்டமைப்பைச் செய்து கொள்வதுடன், குடிவரவு, குடியகல்வுச் சட்டத்திற்குப் புறம்பாக தலைமறைவாகிய சோமவன்ச அமரசிங்கவை பாதுகாப்பாக இலங்கைக்கு அழைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களுடன் சேர்த்து குடிவரவு, குடியகல்வு சட்ட அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்ட உள்துறை அமைச்சையும் ஜனாதிபதி பொறுப்பேற்றார்.

ஜே.வி.பியினரின் அழுத்தங்களால் நாட்டிற்கு பங்கம் விழைவிக்கக்கூடிய அரசியல் நாடகங்களிலும் ஜனாதிபதி ஈடுபட்டு வருகிறார் எனவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (உ-4)

# ஆயுத பலத்தை புலிகள் இழக்கும்போது போர் வலிந்து திணிக்கப்படும்

## திருமலை மாவட்டத் தளபதி பதுமன்

(திருகோணமலை)

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் கடந்த 2 ஆண்டுகளாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தையும் மழுங்கடிப்பதில் தான் ஈடுபட்டு வருகின்றது. எனவே அதற்கு பாதுகாவலராக இருக்கப்போவது எமது படைபலம் தான் என்று திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் பதுமன் கூறுகையில்,

தென்னிலங்கையில் உள்ள பேரினவாத அரசுகள் தமிழ் மக்களுக்கான உரிமைகளைத் தரும் என எதிர்பார்க்க முடியாது. எமது பலத்தை நாம் வலுப்படுத்த வேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.



இதேவேளை, நாம் எமது படை பலத்தை வலுப்படுத்த வேண்டும் என கூறிவருவது குறித்து மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தயாராகுவதாக எவரும் எண்ணக்கூடாது.

எமது ஆயத பலம் வலிமையாக உள்ளவரை தற்போதைய சமாதானச் சூழல் நீடிக்கும். ஆயுத பலத்தை நாம் இழக்கும் போது எம்மீது வலிந்து போர் திணிக்கப்படும். இதனாலேயே நாம் எமது பலத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது என்றார். (உ-64,10)

## இராசி பலன்

**28. 01. 2004**
**(தை 14, புதன்கிழமை)**

| | |
|---|---|
| சப்தமி | பின்னிரவு 1.57வரை |
| ரேவதி | முற்பகல் 9.49 வரை |
| இராகுகாலம் | 12.36-2.06 மணிவரை |
| சுபநேரம் | 5.06-6.36 மணிவரை |

**மேடம்**
கௌரவமான நிலை, காரிய அனுகூலம், கற்பனை மிகுதி, திடீர் நன்மை.

**இடபம்**
எடுத்த காரியம் தாமதமாகும், தன விரயம், அமைதிக்குறைவு, தொழில் கஷ்டம்.

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், செய்தொழில் லாபம், பிரயாணம், உறவினர் வருகை.

**கடகம்**
பிறரது உதவி, உற்சாகம், முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை.

**சிங்கம்**
கடின முயற்சி, பிரயாணம், சிந்தனை மிகுதி, எதிர்பாராத நன்மை.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, உடல் நலக் குறைவு, பிரயாண பயம், கடன் தொல்லை.

**துலாம்**
அபூர்வ சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், பிரயாணம், தொழில் வருமானம்.

**விருச்சிகம்**
பெரியோர் உதவி, ஆரோக்கியமான நிலை, முயற்சி கைகூடும், திடீர் நன்மை.

**தனுசு**
குடும்பக் கவலை ,புதிய சிந்தை, சொத்துக்களால் நன்மை, முயற்சி தாமதம்.

**மகரம்**
செல்வாக்கு குறைவு, காரியதாமதம், உஷ்ண வியாதி, மனப் பதட்டம்.

**கும்பம்**
கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், புதிய பொருள் சோர்க்கை, உறவினர் உதவி.

**மீனம்**
விதண்டாவாதம், தொழில் விருத்தி, காரிய தாமதம், வீண்,செலவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# தேசாபிமான நிறைவேற்றுக் குழு கொழும்பில் கூடியது

(கொழும்பு)

தேசாபிமான இயக்கத்தின் இரண்டாவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தேசிய விவகாரங்கள், ஆளுமை, பொருளாதார அபிவிருத்தி, சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சி சம்பந்தமாக ஆராய்ந்து அது தொடர்பான நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரிக்கவென மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இம்மூன்று குழுக்களினதும் ஒழுங்கமைப்பாளர்களாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளர் சி.கே. திஸநாயக்க, பேராசிரியர் ஜங்சிலி தர்மவர்த்தன, சட்டத்தரணி பந்துல குணசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம் மூன்று குழுக்களும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றி நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்து நிறைவேற்றுக் குழுவின் அடுத்த கூட்டம் நடைபெறும்போது சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசாபிமான இயக்கத்தின் மூன்றாவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-60,10)

# மின் விநியோகிக்க முடியாதென இலங்கை மின்சார சபை கைவிரிப்பு

## தென்மராட்சி மக்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மட்டுவில், மீசாலை, சரசாலை, கல்வயல், கற்குளி,கைதடி, நுணாவில் போன்ற பிரதேசங்களுக்கு இன்னமும் மின் விநியோகம் செய்யப்படாமை குறித்து இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமது ஆட்சேபனைகளை இலங்கை மின்சார சபையிடம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசங்களுக்கு மின் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தம்மிடம் போதிய நிதி வசதியும் பொருட்களும் இல்லாமல் இருப்பதாக இலங்கை மின்சார சபை தரப்பில் தட்டிக்கழிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட மக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதிகளுக்கு மின் விநியோகிப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும்படி தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்ஜிடம் இப்பகுதி பொது அமைப்புகளும் பொதுமக்களும்கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-16)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான டிசம்பர் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## கடகம்



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

சனியின் வேகம் உடலில் விஷ நோயை உண்டாக்கும் மருத்துவ உதவியும் தேவைப்படுகிறது. தொழில் வழியில் எதிர்பாராத தாமத நிலையும் தவிர்க்கமுடியவில்லை. குடும்பத்தில் சிலருக்கு பாகப்பிரிவினை சம்பந்தமான பேச்சுக்களும் முக்கிய இடம்பெறும். இதில் மூன்றாவது மனிதரின் தலையீடு இல்லாமல் இருப்பது நல்லது. உங்கள் நாகரீக வாகனத்தை மாற்றுவதும் உண்டாகும். வேலையாட்கள் வகையிலும் சிறு சிறு பாதிப்பும் இருக்க வாய்ப்பு இருக்கிறது. குடும்பத்தில் தாமதப்பட்ட சிலவற்றை முடிப்பதும், பூமிப்பொருள் அல்லது கட்டட வகை ஒப்பந்தம் செய்வது போன்றவையும் உண்டாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு கவன மறதியினால் பாதிப்பு, பொருள் இழப்பு போன்றவையும் இடம் பெறும். கலைப்பிரிவினர் சற்று கூடுதலான முயற்சி உடையவர்களாக இருத்தல் வேண்டும். குடும்பத்திற்கு நாகரீகப்பொருட்கள் வாங்குவதும் சற்று அதிகமான செலவை கொடுப்பதாகவே இருக்கும். இம்மாதம் நடுப்பகுதிக்கு மேல் போட்டி,பந்தயம்,றேஸ், லாட்டரி போன்ற வழிகளில் தன வரவும் இருக்கிறது. கட்டட வேலையில் பூர்த்தி காண்பது சிலர் புதுமனை புகுவது போன்ற சுபச்செலவுகளும் இடம்பெறும். ஒப்பந்தத் தொழில் உள்ளவர்களுக்கு புதிய வேலைகள் ஒப்பந்தமாவது, தனவரவு மகிழ்ச்சியைத் தரும். தேக ஆரோக்கியம் மட்டும் சீதளத்தால் பாதித்து குணமாகும். பெண்களுக்கு நோய், கருப்பைக்கோளாறு போன்றவை உண்டாகி மருத்துவச் செலவும் இடம்பெறும். ஜன்மசனி காலில் சிறு காயத்தையும் உண்டாக்கும். சகோதரன் அல்லது சகோதரி வகையில் செலவுகளும் இடம்பெறும் மாதம் இது. கலைத்துறையினர்களுக்கு, உத்தியோகப் பிரிவினர்களுக்கு இதே பலன் உண்டு. சக ஊழியர்கள் சரியான நிலையில் இல்லை. கலைப்பிரிவு மனிதர்கள் பணம் எதிர்பார்த்து, கடைசிக் கட்டத்தில் மாதத்தைக் காட்டித் தள்ளிப்போய்விடுவதுண்டு. வரவேண்டிய பணம் ஒரு பகுதி வந்து சேரும். வழக்கு இருப்பவர்களுக்கு தள்ளிப்போட்டுக் கொண்டே போகவேண்டியிருக்கும். கடன் பாதிப்புக் கொடுக்காது. பழைய நண்பர்கள் சிலரை சந்தித்து புது வழிமுறைகளை பின்பற்ற வேண்டியிருக்கும். இதனால் தொழிலில் ஒரு பகுதி வேகமுடையதாக இருக்கும். உறவினர் சந்திப்பு இதமாக இருக்கும். வெளிவட்டாரம் இப்போது தான் பிரகாசமாகி வருகிறது. உத்தியோகப்பிரிவு ஆண்,பெண்களுக்கு இக்காலம் முதல் 18ஆம்திகதி வரை அலுவலகப் போக்கு திருப்தியில்லாமலும் சில சமயம் மற்றவர்களுடன் வாக்குவாதம் வழக்காகவும் இருக்கும். அதன் பிறகு உங்களின் மாற்றம் ஆச்சரியத்தை உண்டாக்கும். காரணம் மேலிடத்து மனிதர்கள் உங்கள் சார்பு உடையவர்களாக இருப்பர். இலாகாமற்றம் இப்போது மனத்திருப்தி அளிப்பதாக இருக்கும். பெண்கள் தேக ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக்கொள்வது அவசியமாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப விரயங்கள் உண்டாவதும் இருக்கும். உங்கள் வாகன வகையில் செலவிட வேண்டியும் இருக்கும். உறவினர்களுடன் சேர்ந்து விருந்துண்ணும் வாய்ப்பும் உள்ளது.

## சிம்மம்



**மகம் 4 பாதங்கள் - பூரம் 4 பாதங்கள்-உத்திரம் 1வது பாதம் வரை - 9 பாதங்கள்**

ஆரோக்கியம் மனதிருப்தியளிப்பதாக இருக்கும். கூட்டு மனிதர்கள் போக்கு கடுமையான சூழ்நிலையில் இல்லை கொடுக்கல் வாங்கலும் இப்போது தளர்ந்து வருவதை உணரலாம். மேலும் பிற்பகுதி இக்காலம் கலைத்துறை தொழில் உள்ளவர்களுக்கு புதிய வேகம் பிறந்திருக்கிறது. பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்தல் அல்லது புதுஒப்பந்தம் செய்வது போன்றவையும் உண்டாகும். குடும்பத்தில் பெண்கள் வகைக்கு ஆடை ஆபரண சேர்க்கை உண்டாகும். அரசாங்க அதிகாரிகள் உங்களுக்கு ஆகாத போக்கில் இயங்குவர் என்பதால் அவர்களிடம் பழகுதல், தொழில் கணக்கு சம்பந்தமாக பேசுதல் வகையில் எச்சரிக்கை தேவைப்படுகிறது. அனுசரித்து மருத்துவச்செலவு செய்யவேண்டியிருக்கும். குடும்பத்தில் அடிக்கடி மனக்கசப்பான பேச்சும் செயலும் நிகழவே செய்யும். ஆரோக்கியம் திருப்தியானது. நீங்கள் பலமற்றவர்களாக ஆகிவிட்டீர்கள். பற்றாக்குறைக்கு குருவும் உடன் சேர்ந்தான். இப்போது என்னசெய்யப போகிறீர்கள்? உங்கள் தொழில் முயற்சி கடன் வரவுக்கு வேண்டிய முயற்சி இவற்றையும் குறைத்துக்கொள்ள வேணடியது தான். மற்றவர்களுக்கு உபகாரமாக இருப்பதைவிட உங்கள் குடும்பப் பிரச்சினைகளை கவனித்துக்கொள்ள வேண்டும். பிரயாணம தள்ளிப்போட வேண்டியிருக்கும். அலைச்சலும் சற்று அதிகமாக இருக்கிறது. அவசரப் போக்கைக் காட்டிக் கொள்ளாமல் முயற்சிக்கவும். குழந்தைகள் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு விடுமுறை தேவைப்படும். பணம் பற்றாக்குறைக்கு பழைய நண்பர்கள் உதவி தேவை. கடன் வழக்கு வழியில் சற்று விழிப்புடன இருக்கவும் உங்களுக்கு பணம் வருவது தெரியும் ஆனால செலவழியும் வழி மட்டும் வேகமானதும் தெரியாமல் இருக்கும். சிலருக்கு பழைய பொருட்கள், பூமி போன்றவற்றை விற்பதும் வாகனமாற்றம் போன்றவையும் உண்டாகும். குடும்ப வகைக்கு நாகரிகப்பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கையும் நடுப்பகுதிக்குமேல் வந்துசேரும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகளால் குறை கூறப்படுதல் மனச்சலனமான போக்கும் இருந்து, படிப்படியே குறைந்து வரும். கலைப்பிரிவு, ஆண்,பெண்களுக்கு வேகம் மிக்க வேலைகள் மிகுந்து விட்டன. குடும்பத்தில் பெண்களிடம் மனக்கசப்பு உண்டாகி நீங்கும். பிற்பகுதியில் தொழில் ஈடுபாடு வேகம் குறைந்து காணப்படும். கூட்டுத்தொழில் உள்ளவர்கள் பக்குவமாக செயல்பட வேண்டும். பழைய விஷயங்கள் சிலவற்றை புதுப்பிக்கும் வாய்ப்பு இப்போது இருப்பதை பயன்படுத்திக்கொள்ளவும். இதேபோல் பழைய நட்பு மீண்டும் ஒன்று சேர வாய்ப்பு இருக்கிறது. கணவன் மனைவி இடையே சிறு முணுமுணுப்பு தவிர பெரிய பாதிப்புகள் ஏதுமில்லை. பணம்கொடுக்கல் வாங்கல் மிதமாக இருக்கும் கடன் ஓரளவு நெருங்கவே செய்யும். விவசாயிகளுக்கு இயந்திரக் கருவிகள் நாகரிக வாகனம் வாங்குவது போன்றவற்றில் முதலீடு அவசியமாக இருக்கும்.

# உங்களுக்கு எப்படி?

## கன்னி



**உத்திரம் 2,3,4 வது பாதம் வரை - அத்தம் 4 பாதங்கள் - சித்திரை 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

இப்போது சிறு பிரச்சினையும் கூடப் பெரிதாக ஆகிவிடலாம். சேமிப்பில் இருந்து பணம் செலவாகும். பணப்பற்றாக்குறை ஏற்படும். பணவரவு இருந்தாலும் பணப்பற்றாக்குறை கூடவே இருக்கிறது. இப்போது உங்கள் சொந்த செலவும் குடும்ப செலவும் கூட இரண்டுமே அதிகம்தான். பிரயாண அனுகூலங்கள் இருக்கின்றன. மறைந்திருந்த விஷயங்கள் சில வெளியாவது உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். உடன் இருப்பவர்கள் மேல்மட்ட அதிகாரிகளும் உங்கள் அன்பு பண்புக்கும் கட்டுப்பட்டவர்களே. இந்த ராசியை உடையவர்கள் திருமணம் ஏற்பதும், காதலர் குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சிக்குரியதாக அமையும். கடன் வழக்கு வகைகள் பாதிப்புக்கு அளவு இல்லை. பழைய நண்பர்களின் சந்திப்பு புதுத் தகவலைக்கொடுப்பதோடு அதன் மூலம் அனுகூலத்தைப்பெறும் வாழ்வையும் உண்டாக்கும். நீங்கள் பற்றாக்குறை உடையவர் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டி இருக்கிறது. ஆனால் தேவைகள் அதிகப்படும் போது பற்றாக்குறை தெரிகிறது. உறவில் இனிமையான சூழ்நிலை நிலவி வரும். மாணவ மாணவிகளுக்கு கல்வியில் சிறப்புத்தன்மை இருக்கிறது. உங்களுக்கு கிரகங்களின் சாதகமான போக்கு தெளிவடையும். தூரத்துப் பிரயாணத்தையும் உண்டாக்கும். குடும்ப வகையில் சுபச்செலவுகளும் புதிய உறவும் சேர்வதும் குறிப்பாக நன்மைகளாகும். தொழில் மந்தம் என்பது இல்லை. வேலையாட்கள் நல்லபோக்கில் இயக்கம் கொள்வதால் தன நிலை உயர்வைப்பெறுவீர். இப்போது தைரிய உயர்வும் இருக்கும் கடன் சம்பந்தமான பிரச்சினைகள் முன்பு இருந்தது இப்போது கட்டுக்கடங்கி வந்துவிட்டன. பெருமை பேச்சுக்கள் அதிகமாக இருக்கும். கணவன் மனைவி உறவு திருப்தியானதே. தனித்து இயங்குவதைவிட்டு கூட்டு முயற்சி கணிசமான நன்மை தரும் என நம்பலாம். மேலும், அலுவலக சூழ்நிலை சுமுகமாக இருக்கின்றன. புதுமண தம்பதிகளுக்கு இனிமையான பிரயாணத்தை கூட்டி வைக்கும். பசும்பொன் ஆபரண சேர்க்கை பட்டாடைகளும சித்தி பெறும். கலைப்பிரிவு ஆண்,பெண்களுக்கு கவர்ச்சிமிக்க மாதம் இது. புதுமனிதர்கள் சந்திப்பு பழைய நண்பர்கள் கூடிப் பேசுவது போன்ற நல்ல போக்குகள் இருக்கின்றன. அரசியல் வட்டாரத்தினர் மூலம் குறிப்பாக சிலர் உத்தரவை பெறுவீர்கள். விருந்து பாராட்டுகளும் உண்டு. கலைப்பிரிவு ஆண்,பெண்களுக்கு சிக்கலான பிரச்சினைகள் சில உருவாகி தானே நிவர்த்தியாகிவிடும். உங்களுக்கு ஆகாதவர்களாக இருந்தவர்கள் இப்போது இடமாற்றத்தைப்பெற்றிடுவர். கொடுக்கல் வாங்கல் குறித்தபடியே இயங்கும். பழைய ஆபரணம் வாகனம் போன்றவை மாற்றல் உண்டாகும். கணவன் அல்லது மனைவிக்கு வணண உடைகள் வாங்குவீர்கள். நாள்பட்ட வழக்கு இப்போது நடைமுறைக்கு வந்தாலும் வேகமில்லை. குழந்தைகள் கல்வி, ஆரோக்கியம் இவை நன்றாகவே இருக்கின்றன. எழுத்து மூலம் சில நன்மைகளையும் காணலாம். சகோதர, சகோதரி வகையில் கருத்து வேறுபாடும் உண்டாகும்.


## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4 பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு தாமதப்பட்ட பிரச்சினைகளில் தீர்வு காணும் காலம். மறைதது வைக்கப்பட்ட காரியங்கள் சிலவற்றை வெளிக்குக்கொண்டுவருதல் மனத்திருப்திக்கும் அமைதிக்கும் காரணமாகும். மாணவ,மாணவிகளுக்கு கல்வி பெருமை தரும். பணம் வேண்டாம். நல்ல ஆரோக்கியம் உடையவர்கள் தான் என்றாலும் இப்போது மிகமிக கவனமாக பார்க்கவேண்டும். குறித்த கடிதப்போக்குவரவு சுமுகமாக இருக்கும். இப்போது சகோதர அல்லது சகோதரி வகையில் வேகம் குறையும். குழந்தைகள் ஆரோக்கியம். மனத்திருப்தி அளிப்பதாக இருக்கும். கூட்டு மனிதர்கள் போக்கு கடுமையான சூழ்நிலையில் இல்லை. கொடுக்கல் வாங்கலும் இப்போது தளர்ந்து வருவதைக் காணலாம். மேலும் பிற்பகுதி ஒப்பந்தத்தை புதுப்பித்தல் அல்லது புது ஒப்பந்தம் செய்வது போன்றவையும் உண்டாகும். குடும்பத்தில் பெண்கள் வகைக்கு ஆடை ஆபரண சேர்க்கை உண்டாவதுடன், திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளும் விருந்து அனுபவித்தல் போன்றவையும் உண்டாகும். கார், லொறி, ஆட்டோ போன்ற தொழில் உள்ளவர்களுக்கு கணிசமான அளவு தன ஆதாயம் இருக்கும். மேலும் புதிய வாகனம் வாங்குவது பழையது புதுப்பித்தல் போன்ற நன்மையும் இருக்கும். அயல் நாட்டு உறவினர் சந்திப்பும் உண்டாகும். கடன் வழக்கு போன்றவை அலைச்சல் கொடுக்கும். தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். இதை உணர்ந்தும் எதிலும் அளவோடு செயற்படுவது தேவைப்படுகிறது. பணம் கொடுக்கல் வாங்கல் செய்ப இந்த நிலை பெரும் பிரச்சினையாக இருக்கக் கூடும். இதர தொழில் செய்பவர்களுக்கு ஓர் அளவு இதமான போக்கு இருக்கும். குடும்ப விஷயங்கள் சில உங்களுக்கு கட்டுப்பட்டதாக இல்லை. கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு ஓர் அளவு இதமான போக்கு இருக்கும். குடும்ப விஷயங்கள் சில உங்களுக்கு கட்டுப்பட்டதாக இல்லை. கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கும் இதே போன்று கருத்து ஒற்றுமை இல்லாத சூழ்நிலை இருந்து வரும். பிரயாணமும் சில சமயம் தள்ளிப்போட வேண்டியிருக்கும். வெளிவட்டார மனிதர்கள் உங்களுக்கு அடிக்கடி வாக்குவாதங்கள் சலனப்போக்கு இருந்து கொண்டு தான் இருக்கும். புத்திரர் புத்திரியர் வகை மருத்துவச் செலவுகள் இருக்கின்றன. புது உடைகள் செம்பொன் ஆபரண சேர்க்கையும் குடும்பத்திற்கு ஏற்படும். இனிமைக்குரிய போக்குத் தொடர்ந்து இருந்து வரும். சிலருக்கு திடீர் திருமணம் உண்டாவதும் கவனிக்கத்தக்கது. அதிகாரிகள் சந்திப்பது வேண்டி அலைச்சல்பட வேண்டியிருக்கும். இதனால் சற்று செலவுகளும் மன உளைச்சலும் அதிகம் தான். அடிக்கடி கவன மறதியும் உண்டாகும். புண்ணிய ஸ்தல பிரணயாணம் தெய்வ வழிபாடும் மனச்சுமையை கொடுக்கும். உடன் இருப்பவர் கீழ் மனிதர்கள் எப்போதும் போல மதிக்கப்படுவர். உங்களுக்கு வழக்கு `சற்று வேகமாக இருந்தது. இந்த மாதக்கடைசியில் வேகம் குறைத்து விடும். எதிலும் சலனம் வேண்டாம். விருந்து வேடிக்கைகளும் உண்டாகும். கடல் கடந்த கடிதம் வருவது, கவர்ச்சியான விஷயத்தைத் தாங்கிவருவதும் சிலருக்கு குறிப்பிடத்தக்கதே.

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

ஜன்மத்தில் சூரியன், செவ்வாய், புதன் , சுக்கிரன் புதிய நட்பு உண்டாவது பழைய ஒப்பந்தங்களைப் புதுப்பித்தலும் உண்டாகும். சகோதர வழியில் முக்கிய செலவுகள் இடம்பெறும். சிலருக்கு திருமணம் முடிவதும் மகிழ்ச்சிக்குரிய பெரும் விஷயங்களாகும். உறவினர் சந்திப்பு சுப விஷயம் குறித்து பேசுவது, விருந்துண்பது போன்றவையும் உண்டாகும். கடன் வழக்கு சம்பந்தப்பட்டவரை நீங்கள் பலமானவரே. சிலர் தரும் ஸ்தாபனத்தின் கௌரவ பதவி ஏற்பதும் உண்டாகும். தைரிய உயர்வு வரும். ஸ்தாபனத்தின் கௌரவ பதவி ஏற்பதும் உண்டாகும். நீங்கள் நல்ல நட்பினரையும் விட்டு விலகி இருப்பதாகக்கொள்ளலாம். நாகரீகப் பொருட்கள் சிலது விற்பது அல்லது மாற்றி அமைப்பதும் உண்டாகும். இயந்திரக்கருவி வாங்குவது, கட்டடம் கட்டுவது போன்ற வழியில் செல்வுகள் தான் இருக்கும். புத்திரர் புத்திரியர்கள் பிற்பகுதி இக்காலம் ஓர் அளவு இணக்கமாக இருப்பர். குடும்பத்தில் குழந்தைகள் ஆரோக்கியம் மகிழ்ச்சியாக இருக்கும். இப்போது இனிமையான சூழ்நிலை உருவாகி வருகின்றது. பெரிய தொழில் ஒப்பந்தம் செய்வது , சிலர் வெகுதூர பிரயாணத்தை ஏற்பதும் உண்டாகும். போட்டி ,பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் சிறப்பாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பச்சொத்து சம்பந்தமாக இருந்துவந்த வழக்கு உள்ளவர்கள் இதை அவசியம் கவனிக்கவேண்டும். உத்தியோகப்பிரிவினர்களுக்கு பாராட்டுகளும் உண்டாகும். அரசியல் நண்பர்கள் மூலம் தொழில் ஆதாயத்தைப் பெறுவீர்கள். இது அமைப்பான காலம். வெளிவட்டாரத்தினர் வரை உங்கள் செயல்முறைக்கு இணக்கமான நிலைக்கு வந்துவிடுவர் பயமில்லை. சனியைவிட பலம் மிக்கவர்கள் இந்த ராகு கேது குடும்ப உறவினில் நல்ல செலவுகள் இடம்பெறுவது போல்,துர்க்கரும செலவுகளும் இடம்பெறும். பிரயாணம் உடனுக்குடன் உண்டாவது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். உஷ்ண நோய் பாதித்து குணமாகும். செலவுகள் அதிகமாக இருந்தபோதிலும், செய்தொழில் வழியில் முற்போக்கிற்கான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. திடீர் பணவரவுக்கு இப்போது வழி உண்டாகும். தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியடையும் என்பது கோள் சார விதி. இந்த நேரத்தில் மிகவும் வேண்டியவர்களும் பகைப்படத்தான் செய்வர். சில சமயம் இது உசசக்கட்டத்தையும் அடையலாம். உங்களுக்கு திடீர் தன யோகத்தைச் செய்பவனே. லாட்டரி,போட்டி ,பந்தயம் போன்ற ஈடுபாடு உடையவர்கள் சற்று அதிக முயற்சி எடுத்துக் கொள்ளலாம். இந்த ராகு காரிய நட்டத்தை உண்டாக்குவான் என பயம் வேண்டாம். மனைவி ஆரோக்கியப் பாதிப்பு மருத்துவச் செலவு குடும்பத்தில் இடம்பெறும். உங்கள் அவசரத் தேவைகளைப பூர்த்தி செய்ய அந்நியர்களும் உதவியாக இருப்பர்.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
உளவரை வல்லைக் கெடும்

-குறள்

# வலம்புரி

## இந்தியாவின் மாநிலமாக மாறிவரும் இலங்கை

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச நாடுகள் அதீத அக்கறை காட்டுவதன் காரணம் இலங்கைவாழ் மக்கள் யுத்தத்தால் பாதிப்படைகின்றார்கள் என்ற அனுதாபத்தினாலல்ல.

மாறாக இலங்கையின் இன விவகாரத்தில் தலையிடுவதன் மூலம் தமது நாட்டுக்கு நன்மை கிடைக்கும் என்றவகையிலேயே வெளிநாடுகள் அக்கறை காட்டுகின்றன. குறிப்பாக இலங்கைமீது அதீத அக்கறைகாட்டும் அமெரிக்காவைப் பொறுத்தவரை தென்னாசியப் பிராந்தியத்தில் தனக்கோர் தரிப்பிடம் தேவையாகவுள்ளது.

இதற்கு ஒரு வாய்ப்பாக இலங்கை இனவிவகாரத்தை அந்நாடு பயன்படுத்திக் கொள்கின்றது.

இதற்கு மேலாக இலங்கையின் நலனில் அக்கறை உள்ள நாடாகத் தன்னைக் காட்டிக் கொள்வதின் மூலம் அமெரிக்காவின் ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்யவும் முடியும். இதற்காகவே அமெரிக்கா இலங்கைக்குள் ஊடுருவ முற்பட்டுள்ளது.

இதேவேளை யப்பானைப் பொறுத்தவரை யப்பான் நாட்டுக்கு இலங்கை நல்லதோர் சந்தைவாய்ப்பாகும். இலங்கை மக்கள் யப்பான் நாட்டு உற்பத்திப் பொருட்களை ஆர்வத்தோடு நுகர்வதனால் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை, யப்பான் நாட்டின் நல்லதோர் சந்தை வாய்ப்பை கெடுத்துள்ளது. இதற்காகவே யப்பான் அரசு இலங்கை இன விவகாரத்தில் தலையிட்டுள்ளது.

ஆக, அழுவார் அழுவார் எல்லாம் தன் கவலை என்பது போல் இலங்கையில் அனுதாபம் காட்டுகின்ற நாடுகள் அனைத்தும் தத்தம் நலனை மையமாகக் கொண்டு செயற்பட, இவற்றை யெல்லாம் அவதானித்து வரும் இந்தியா தனது அண்டை நாடான இலங்கையில் நடைபெறும் வெளிநாட்டாரின் ஊடுருவல் தன்னைப் பாதிக்கும் என கருதிக் கொண்டது.

குறிப்பாக இலங்கைக்குள் அமெரிக்க ஊடுருவல் தனது பாதுகாப்பிற்கும், இறைமைக்கும் பெரும் பாதகமாக அமையும் எனத் தீர்மானித்துக் கொண்டு, அதிரடியாக இலங்கைக்குள் நுழையத் தொடங்கியது.

இலங்கைக்குள் நுழைவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட இந்தியா, விடுதலைப்புலிகள் கடல் வழியாக ஆயுதங்களைக் கடத்துவதாக இலங்கைக்குத் தகவல்களை வழங்கி இலங்கையின் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக் கொண்டு தனது திட்டத்தை அமுலாக்கியது.

திருமலையில் பெற்றோல் குதங்களை குத்தகைக்கு எடுத்ததன் மூலம் திருமலை துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள்ளும், அவதானிப்புக்குள்ளும் கொண்டுவந்த இந்தியா, பலாலிவிமானப் படைத்தளத்தின் ஓடு பாதையை திருத்திக் கொடுப்பதின் மூலம் , பலாலி படைத் தளத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முற்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை கடற்படைக்குத் தேவையான ஆயுதங்கள், யுத்தக் கப்பல்கள், பயிற்சிகள், ஆலோசனைகள் என்பவற்றை வழங்கி கடற்படையின் பூரண ஆதரவைப் பெற்றுக் கொண்டுள்ள இந்தியா இப்போது இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இலங்கையின் இன விவகாரத்தை சமாதானமான முறையில் தீர்த்துவைக்க எதுவித பங்களிப்பையும் வழங்காத இந்தியா இலங்கையின் பாதுகாப்பு- இறைமை என்பவற்றை பலவீனப்படுத்தி தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் வகையில் திட்டங்களை வகுத்துச் செயற்படுவது இலங்கையை தனது மாநிலங்களில் ஒன்றாக மாற்றிக் கொள்ளும் நடவடிக்கை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

# ஜே.வி.பி. தலைவரை கைது செய்ய எந்தவித ஆதாரங்களும் இல்லையாம்

## கைவிரிக்கிறது குடியகல்வு, குடிவரவு திணைக்களம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவைக் கைது செய்யுமாறு கோரும் தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, சோமவன்ச அமரசிங்க 1980இல் இந் நாட்டைவிட்டு சட்டவிரோதமான முறையில் வெளியேறினார் என்பதற்கான விபரங்களை அறிவதற்கு எத்தகைய ஆவணங்களும் இல்லையென குடியகல்வு, குடிவரவுத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் தரவுகள் 1990இல் கணனி மயப்படுத்தப்பட்டதற்கு முந்திய காலப்பகுதிக்கான ஆவணங்கள் எதுவுமேயில்லையென அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து கடந்த 20ஆம் திகதியன்று இலங்கை திரும்பிய அமரசிங்காவை, குடியகல்வு சட்ட விதிக்கு முரணாக வெளிநாட்டுக்குத் தப்பியோடிய குற்றத்திற்காக கைது செய்ய வேண்டுமென ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி கடுமையாகக் குரல் கொடுத்துவருகின்றது.

கடவுச் சீட்டு விபரங்களையும், அவர் சட்ட விரோதமான முறையில் நாட்டைவிட்டு வெளியேறினாரா என்பதையும் அறிய அரசு விரும்புகின்றதென நீதியமைச்சர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடு சென்றதற்காக நூற்றுக் கணக்கான இளைஞர்களைக் கைது செய்யும் நிர்வாகம், இவருக்கு விதிவிலக்களிப்பது ஏனெனத் தனக்குப் புரியவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

1980இன் இறுதிப் பகுதியில் அமரசிங்க சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா சென்று அங்கிருந்து பிரிட்டனுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.2000ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் இடைக்கால அரசொன்று அமைக்கப்பட்டபோது அமரசிங்க லண்டனில் உள்ள உயர்ஸ்தானிக ராலயம் மூலம் கடவுச் சீட்டைப் பெற்று இலங்கை வந்தார்.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு வெற்றிபெற்றதையடுத்து அமரசிங்க 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடவுச் சீட்டுடன் நாட்டை விட்டு வெளியேறினார்.

இதுபற்றி விவாதிப்பதற்கு அமரசிங்காவைச் சந்திக்க இயலவில்லையென்றும், ஜே.வி.பித் தலைவர்களுடன் நேர்காணல் ஒன்றுக்குக் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான பதிலெதுவும் கிடைக்கவில்லையெனவும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ராஜித சேனாரட்ண, ஜனாதிபதியின் கணவரான விஜயகுமார ரணதுங்காவை கொலை செய்த குற்றத்திற்காக அமரசிங்காவைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவைக் கேட்டிருந்தார். இது சம்பந்தமாக ஜே.வி.பித் தலைவர்களுடன் தகுந்த சாட்சியங்கள் இருப்பதாகவும், வழக்கு இப்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். (து)

## சொந்த நிலம் பறிபோன நிலையில் சுதந்திரதினக் கொண்டாட்டமா ?

### இடம் பெயர்ந்த மக்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேச செயலகத்தில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று சுதந்திர தினம் கொண்டாடப்படுவதை தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இது விடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் பெப்ரவரி நான்காம் நாளை சிறிலங்கா அரசு சுதந்திர நாளாக முன்னெடுக்கவுள்ளது.

தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து, தமது பாரம்பரிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களிலும் உற்றார் உறவினர் வீடுகளிலும் இன்னல்பட்டு வாழ வகையற்றுத் தவிக்கும் போதும் சுதந்திர நாள் கொண்டாட்டம் அவசியமா?

வலிவடக்கு மக்கள், சொந்த நிலங்களை, கடல்தொழிலை, வேலைவாய்ப்புக்களை, சிறிலங்கா படைகளின் ஆக்கிரமிப்பால் இழந் துவிட்டார்கள் என்பதை யாவரும் அறிவர்.

உயர் பாதுகாப்பு வலயம் எமது இருப்பையே விழுங்கி விட்டது. எமது அடுத்த சந்ததிக்கு நாம் தரப்போகும் முதுசொம் அகதி வாழ்க்கையா?

எனவேதான் வலி-வடக்கு செயலகத்தில் பெப்ரவரி நான்காம் நாள் சுதந்திரதினம் கொண்டாடப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. அந் நிகழ்வை முற்றாக நிராகரிக்கிறோம்.

எமது மண். எங்கோ எட்டமுடியாத கானல்நீராக எமக்கு கற்பனையில்மட்டும் இருப்புக்கொள்வதா? நாம் எமது சொந்த முகவரிகளை இழந்து கண்ணீர் விடுகின்றோம் இந்த நிலையில் சுதந்திர நாள் கொண்டாட்டம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது.

அடிப்படை மனித உரிமைகளை மீறி நிற்கும் உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படும் போதுதான் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான பாதை திறக்கும். அதுவரையில் நிரந்தர சமாதானம் எட்டாக் கனிதான்.

வலி.வடக்கு மக்களுக்கு பெப்ரவரி நான்காம் நாள் கரிநாள்-துக்கநாள் என்பதையிட்டு வலிவடக்கு மக்கள் மாற்றுக் கருத்துக் கொள்வதற்கு இடமில்லை.

பெப்ரவரி நான்காம் நாள் சுதந்திரதினம் கொண்டாடுவதற்கான நாளல்ல என்பதையும் அது இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு துக்கநாள் என்பதையும் அனைத்துலகமும் புரிந்துகொள்ளட்டும், ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா ஆயுதப்படைகளை அகற்றி சமாதானத்தின் மீதான பற்றுதலைக் கட்டி எழுப்ப அனைத்துலக சமூகமும் கூட்டு முயற்சி எடுக்கட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப் பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புலோப்பளை வீதி, பளை எனும் முகவரியில் இடம் பெறவுள்ளது.

(ச)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆன்மிக வாழ்க்கையில் நான் பேரின்பம் பெறாமற் போனால் அதற்காகப் புலன் இன்ப வாழ்க்கையை ஏன் நாடவேண்டும்? எனக்கு அமுதம் கிடைக்காமற் போனால் அதற்காகச் சாக்கடை நீரையா நாடிச் செல்வது?

**சுவாமி விவேகானந்தர்**

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோர்

## புனர்வாழ்வுக்கான சர்வதேச சபை உறுப்பினர்கள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வுக் கான சர்வதேச சபையைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் குழுவொனறு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இக்குழு யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள காலத்தில், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், பேராசிரியர் தயாசோமசுந்தரம் மற்றும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

இங்குள்ள சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களைத்திரட்டி அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை களை ஆரம்பிப்பிப்பது பற்றி அச் சந்திப்புக்களில் கலந்துரையாடப்படவுள்ளது. (உ-16)

## அறிமுக விழா

(திருநெல்வேலி)

வான் முழக்கம் சஞ்சிகை 6 வது இதழின் அறிமுகவிழா கடந்த ஞாயிறன்று குடத்தனை திருச்சபை கல்வி வளாகத்தில் என்.மயூரருபன் தலைமையில் இடம்பெற்றது.

ஆசியுரையை அருட்சகோதரர் ராஜன் ரூபனும் சிறப்புரையினை கடற் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் எஸ். தீபனும் மதிப்பீட்டு உரையை கவிஞர் சேரன் சிவராசாவும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விக்கழக பொறுப்பாளர் இ.தாயகன் கலந்து கொண்டார்.ஏற்புரையை நூல் ஆசிரியர் வே.தவச்செல்வன் வழங்கினார்.

(உ-43)

## சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற சுமார் 1250 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்ட ஆயிரத்து 250க்கும் மேற்பட்டோர் கடந்த வருடம் கைதாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பொலிஸ், கடற்படை மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 758 பேர் வெளி நாட்டுப் பிரஜைகள், ஏனையோர் இலங்கைப் பிரஜைகள் என உள் துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சுகள் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற 125 இலங்கையர்கள் கடந்த இரண்டுமாத காலப் பகுதியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும், போலிக் கடவுச் சீட்டுக்கள் மூலம் வெளி நாடுகளுக்குச் செல்ல முற்பட்ட 200 பேரை இவ்விரு மாதத்தினுள் பொலிஸார் கைது செய்துள்ளனர் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-60)

# யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திற்கு மேலும் 40 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திற்கு 2002/2003 கல்வி ஆண்டிற்கு உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளை மேற்கொள்ள 4வது வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் மேலும் 40 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்கள் வருமாறு;

**பௌதிக விஞ்ஞானம் (27பேர்)**

கே.கிருஸ்ணபிள்ளை, வி.துஷ்யந்தன், எஸ்.பிரஷாந்தன், எஸ்.பாலமுரளி, வை.மகாதேவன், ஜீ.சர்மிலி, ஏ.கிருஸ்ணப்பிரியா, ரீ.பிரதீப், எஸ்.அஜீஸ்குமார், எஸ்.சிறிதரன், எ.நிஷாந்தினி, பி.எஸ்.ஜெறோம், எஸ்.நிஷாந்தீன், வி.யதுஷன், ரி.ஞானமாலா, ஜே.டயானா, ரீ.திலீபன், ஆர்.ஜனார்த்தனி, ஜீ.பிரதீப், ஏ.கமிலா, எஸ்.சிறிஇராகுலன், ரீ.சுதாசினி, எஸ்.அமலராஜன், ஆர்.சண்முகஜோதி, ரீ.ரஜீபன், எஸ்.நர்த்தனன், எஸ்.ராஜீவ்.

**உயிரியல் விஞ்ஞானம் (13பேர்)**

கே.குமாரசிவம், பி.திலிப், எஸ்.பாலஜீவன், ஜீ.பி.ரஜோதயன், எச்.வரதராஜ், என்.பிரதாபன், எஸ்.லாவஞ்ஜா, கே.கார்த்தீபன், எஸ்.ரோசினி, கே.குயிலினி, ஏ.ஜே.ஜெய்சிகா, எல்.கிளாறின், எஸ்.மயூரதி. (உ)

## மகேஸ்வரன் தமிழ்நாடு பயணம்

(கொழும்பு)

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று தமிழ்நாடு பயணமாகிறார்.

தமிழ்நாடு செல்லும் அமைச்சருக்கு இன்று மாலை திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தில் வைத்து "அறப்பணிச் செல்வர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாவலர் பெருமானுக்கு வழங்கப்பட்ட "நாவலர்" என்னும் பட்டத்திற்குப் பின்னர் ஈழத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இப் பட்டம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

## மோ.சைக்கிள்..

சைக்கிளில் சென்ற ஆண், பெண் இருபாலாரும் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டுப் பின் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்த அதிரடி நடவடிக்கை தொடர்பாக பொலிஸ் அதிகாரியொருவர் தகவல் தருகையில் மோட்டர் சைக்கிள் ஓட்டுநரும் பின்னாசனத்தில் இருப்பவரும் அவசியம் ஹெல்மட் அணிவதோடு உரிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தக் கூடாதென்றும் தெரிவித்தார்.

இத்திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் பொலிஸாரும் ஈடுபட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம)

# கூட்டுறவுப் பணியாளர் சம்பள அதிகரிப்பு கூட்டுறவு அ.உ.ஆணையாளரின் அனுமதி தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1250 ரூபா சம்பள அதிகரிப்பு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களின் அனுமதியின்றி வழங்கலாம் என்று வடக்குக் கிழக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளர் சே.விநாயகலிங்கம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல கூட்டுறவுச் சங்கங் களின் தலைவர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

2003.12.31ம் திகதியில் 58/2003 இலக்கமிடப்பட்டு கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகளில் முதலாம் பந்தியில் தவறாகச் சேர்க்கப்பட்ட "இக் கொடுப்பனவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி பெற்று வழங்கப்படல் வேண்டும்" என்ற வாக்கியம் நீக்கப்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இக் கடிதம் சகல மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## வீதி திருத்த நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாயன்மார் வீதியைப் புனரமைப்பதற்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 4 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (உ)

## அரசின்...

நடைபெற்றுவந்த போர் நடவடிக்கைகளினால் எமது மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களுக்கான உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் திட்டங்களை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இத்திட்டங்களுக்குச் சர்வதேச சமூகம் நிச்சயமாக ஆதரவு தருமென நம்பிக்கை எமக்குண்டு.

எமது மக்களுக்குத் தேவையான மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. தென்னிலங்கை அரசியல் அதிகாரப் பீடத்தில் யார் இருக்கிறார்கள் என்பதும் எமக்குத் தெரியாதுள்ளது. இந் நிலையில் அனுசரணை நாடுகளுக்கு எமது நிலைப்பாடுகளை விளக்கிக் கூற வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். அதனை மேற்கொள்வதற்காகவே நான் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். இதன் மூலம் நாம் சமாதானத்தில் கொண்டுள்ள பற்றுறுதியையும் சர்வதேச நாடுகளுக்கு எடுத்துக் கூற முடியுமென்று சு.ப.தமிழ்ச் செல்வன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம)

## புலிகள்...

டுள்ள அரசியல் நிலைமை மற்றும் வடக்குக் கிழக்கில் சமாதான சூழ்நிலையின் பின்னர் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சம்பந்தமாக இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இலங்கை இராணுவம் யாழ்.மாவட்டத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்ய முடியாதுள்ளதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் பிரித்தானியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்திய அரசின் உதவியோடு பலாலி விமானத் தளத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கையையும் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் தான் ஈடுபடப் போவதாகவும். அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரித்தானியத் தூதுவர் பதிலளிக்கையில், கடந்த இரு வருடங்களாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை எமது அரசு அவதானித்து வருகின்றது. அவர்கள் எதிர்காலத்தில் பயங்கரவாத நடவடிக்கையில் இருந்து முற்றாக விடுபடுவார்களேயானால் புலிகளின் தடையை நீக்குவது பெரிய பிரச்சினையல்ல. எமது நாட்டின் சட்டங்களின்படி தடைசெய்யப்பட்ட எந்தவொரு இயக்கமும் தொடர்ந்தும் இப் பட்டியலில் இடம் பெறவேண்டிய அவசியமில்லை. அவர்கள் தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்திவிடுவதன் மூலம் அப்பட்டியலில் இருந்து நீக்கி விடுவதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுக்க முடியுமென்று அவர் தெரிவித்தார். (ச)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472

## யாழ்.இந்து முதலிடம்

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

தி.மயூரன், க.சஞ்சுதன், ந.நிரஞ்சன், ச.நடராஜசர்மா ஆகியோர் வெற்றியீட்டிய யா/இந்துக் கல்லூரியின் அணியில் அங்கம் பெற்றிருந்தனர்.

இதேவேளை, இவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள அகில இலங்கை ரீதியிலான வினாவிடைப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

தலா 2 ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசும் சான்றுப் பத்திரமும் இவர்களுக்கு வழங்கப்படவிருப்பதுடன் இதன் மூலம் கல்லூரிக்கும் மாகாண வெற்றிக் கிண்ணம் கிடைக்கவிருக்கின்றது. (உ)

## மாணவர் குழுக்கள் மோதல்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இரு மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலையடுத்து, அங்கு பெரும் பதற்றம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் மீது பகிடிவதை புரிந்தது தொடர்பாக சிரேஷ்ட மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடே மோதலாக வெடித்துள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பதில் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ச-4)

## கிழக்குப் பல்கலை...

த்திற்குச் சென்றுவிட்டதாகத் தெரிய வருகின்றது.

இது விடயம் தொடர்பில் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.அருளுடன் நாம் தொடர்பு கொண்ட போது,

பேராசிரியர் மூக்கையா எமது பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நாலு வருடங்கள் பணியாற்றி வருகின்ற போதிலும் பல்கலைக்கழகத்திற்கோ அன்றி இங்கு பயிலுகின்ற மாணவர்களினதோ வளர்ச்சிக்காக இற்றைவரை அவர் எதுவும் செய்யவில்லை.

இங்கு பௌதிக வளங்கள் பற்றாக் குறையாக உள்ளன புதிய கற்கை நெறிகள் எதுவுமே ஆரம்பிக்கப்படுவதாக இல்லை.

இவற்றையெல்லாம் நாம் அடிக்கடி சுட்டிக் காட்டிவருகின்ற போதிலும் தட்டிக்கழிப்புக்கள் நடைபெறுகின்றதே தவிர வேறெதுவும் இடம் பெறவில்லை.

ஜனாதிபதி மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஆகியோர் கவனத்திற்கும் இவ்விடயங்கள் கொண்டுவரப்பட்ட போதும் உருப்படியாக எதுவும் இடம் பெறவில்லை.

இச்செயற்பாடானது எம்மை வெகுண்டெழத் தூண்டியுள்ளது. இருப்பினும் எமது செயற்பாட்டினால் பல்கலைக்கழகப் பணிகள் எவற்றுக்கும் குந்தகமேற்படவில்லை. விரிவுரைகள் யாவும் வழமை போல் இடம் பெற்றன எனக் கூறினார். (உ)

## நோர்வேத் தூதுவர் ...

தும் முன்னெடுப்பதற்கு உறுதியாக இருப்பதாகத் தெரிவித்த் தளபதி கருணா சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்புக்குச் சென்ற நோர்வே தூதுவர் அரச அதிபர் இ.மௌனகுருசாமி ஈ.பி.டி.பி. அலுவலகப் பொறுப்பாளர் சிவா மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார். (ச)

## துணை...

மூடுவதாக அவர் கூறியுள்ளார் என்று ஒன்றியப் பிரதிநிதி கூறினார்.

இதேவேளை, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் தற்போது கொழும்பில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

நியூ சிற்றி றேடேர்ஸ்
சகல விதமான T.V களுக்கு சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற் அன்ரனா உதிரிப் பாகங்கள் பெற்றுக் கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்
நியூ சிற்றி றேடேர்ஸ்
135 கஸ்தூரியார் வீதி
(குளத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 222-3226
(சி-7310)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர் திக்கரை களபூமியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எஸ்.வி.எம்.நிறுவன முகாமையாளரும் காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவனும், புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை, யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங் களின் உறுப்பினரும், யாழ் வர்த்தக சங்க உறுப்பினரும், திருமால் அடியவரும், பக்தனுமான

தம்பையா தியாகலிங்கம்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ். நந்தசேகரன் முன்னிலையில் நேற்று (27. 01. 2004) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தனது சமாதான நீதிவான் பணியைத் தொடர திருவெங்கடேஸ்வரன் அருள் பாலிக்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்

154 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

எஸ்.வி.எம். நிறுவனமும்
ஊழியர்களும்
(சி-7317)

யாழ் நகரில் முதன் முதலாக
பொருட் கண்காட்சியும்
மணப் பெண் அலங்கார காட்சிகளும்

எதிர்வரும் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் பொருட் கண்காட்சி ஆரம்பமாகும். மாலை 3.00 மணியளவில் யாழ்.மக்களை வியக்கவைக்கும் வகையில் வர்ண மின் ஒளியில் இந்து, கிறிஸ்தவ, பௌத்த, குஜராத்தி மணப்பெண்கள் அலங்காரத்துடன் தமது மதங்களுக்கு ஏற்ற முறையில் உலா வரும் காட்சிகள் இடம் பெறும் காணத் தவறாதீர்கள்

பொஸ் அழகுக் கலை நிறுவனத்தின் மாணவர்கள்
(சி-7316)

அப்பலோ வைத்தியசாலை நிபுணர்களின்
மாபெரும் இலவச மருத்துவ
சிகிச்சை முகாம்

எதிர்வரும் 31ம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. கொழும்பு லயன்ஸ் கழக அனுசரணையுடன் யாழ்.லயன்ஸ் கழகமும் அப்பலோ வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் இணைந்து மாபெரும் சிகிச்சை முகாம் ஒன்றை நடாத்தவுள்ளனர். இவ் சிகிச்சை முகாமில் அனைத்து நோய்களின் வைத்திய பிரிவுகளும் சிறப்பாக இருதய நோய்ப் பிரிவும் அடங்கும். அத்துடன் கண் பரிசோதனையும் நடாத்தப்பட்டு இலவச கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

இவ் அரிய சந்தர்ப்பத்தைத் நழுவ விடாது அனைத்து நோயாளர்களும் நேர காலத்துடன் சமுகம் கொடுத்து பலன் அடைய அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

தகவல்
ஆயர் இல்லம்
(8172)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.